# திராவிடநாடு

8–10–62 | வார வெளியீடு | விலை 16 காசு


# விடுதலை கண் விழிக்கும்

—[ இ. உதயவினன் ]—

புரளலை கரைமோதி அழிந்தால்—கடல்
போர்முழக் கழிந்திடுமா?
உரிமை கழறுயிரை அழித்தால்—அவர்
குமுறுள மணைந்திடுமா?

எரிமலை மனமொருநாள் வெடிக்கும்—உலகை
எரிக்கு மிதையுணர்வீர்!
கரிக்கும் நீர்தானெம் கண்ணீர்—கொடுங்
கோலுக் கதுகூர்வாள்!

குறையும் நிலவுங்கண் விழிக்கும்—விடுதலை
காணும் சிப்பிக்குள்
உறையும் முத்துங்கண் விழிக்கும்—மணிமுடி
உறவில் உலகாளும்

நிறைந்த குறிக்கோள்கண் விழிக்கும்—காலம்
வெல்லும் சிந்துதிர
உறைவில் விடுதலைகண் விழிக்கும் திருவிட
மடியி லதுவாழும்.

# இளந்திரையன் ஆட்சி

—[ச. கனகராசன்]—

உலக நாடுகள் பலவற்றில் ஒரு ஆண்டிற்குள்ளாகவே பலர் ஆட்சியைக் கைப்பற்றுகின்றனர். நிலையாகத் தொடர்ந்து யாரும் ஆட்சிசெய்ய முடியவில்லை, குறிப்பாகச் சொன்னால் பிரான்ஸ் நாட்டில் டிகாலேயிக்கு முன்னால் நடந்த ஆட்சியில் யாரும் தொடர்ந்து ஒரு ஆண்டுக்காலும் ஆட்சிப்பீடத்தில் இருந்தது இல்லை. காரணம், ஆள்வோரிடத்தில் திறமில்லை என்றுதான் பொருள். மக்களால் தேர்ந்தெடுத்த ஒருவர் மறுமுறை தேர்ந்தெடுக்காமல் விடப்படுகின்றார். ஒருவர் ஒருமுறை முதலமைச்சராக வந்துவிட்டால், மறுமுறை வரமுடிவதில்லை. இப்படித்தான் உலக வரலாற்றில் நடந்திருக்கிறது. காரணம் அவர்கள் ஆளுகின்ற நேரத்தில் ஆட்சியைச் சரியாக நடத்தாமல், நாம்தான்பதவிக்குவந்துவிட்டோமே, நம்மை யார்தான் என்ன செய்ய முடியும் என்ற இறுமாப்பால் இருந்துவிடுகின்றனர். அவர்களின் பதவிக்காலத்தில் மக்கள் எந்தவிதப் பலனையும் அடையமுடியாது. அவர்களின் ஆட்சிக்காலத்தில் பலனை அடையமுடியாவிட்டாலும், வாழ்க்கை நிலையும் பாதிக்கப்பட்டு மிகவும் மோசமான நிலைக்குக் கொண்டுசெல்லப்படுகின்றனர்.

அதனால் மக்களும் எந்தவிதப் பலனையும் அடையமுடியாது. துன்பத்தில்தான் சிக்கவேண்டி நேரிடும். அதனால்தான் அரசியல் வித்பன்னர்கள் எல்லோரும் ஆட்சிப்பீடமேறுவோர்—கற்றவர்களாகவும் அரசியலில் முதிர்ந்த அனுபவமிக்கவர்களாகவும்—நாட்டை எப்படி ஆளவேண்டும் என்ற முறை தெரிந்தவர்களாகவும் இருக்கவேண்டுமென்று துணிந்து கூறுகின்றனர். அதுவே நல்லமுறை–சிறந்த முறையுமாகும். அதனைக் கடைப்பிடித்தால் நாடும் வாழும், நாட்டு மக்களும் நலமெய்துவர், நல்லோரும் வாழ்த்துவர்.

குறிப்பாக, தொண்டைமான் இளந்திரையன் ஆட்சியை நாடும் வாழ்த்துகிறது. நல்லோரும் வாழ்த்துகின்றார்கள், ஏட்டிலும் இடம்பெற்று எல்லோரும் ஏற்றிப் போற்றும் வகையில் புகழ் பெறுகிறது.

இளந்திரையன் குறள்முறைப்படி ஆண்டான். அரசியல் நடாத்தும் நெறிமுறை வழுவாது நடாத்தினான். அவன் ஆட்சியில் பஞ்சம் இல்லை; பட்டினி இல்லை; வறுமையால்—வாட்டத்தால் வதைபடவில்லை, மக்கள். அவன் நாடு வளமிக்கதாய் மாற்றார் விரும்பும் வகையில் செழிப்பு மிக்கதாய் — மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்ததாய் இருந்தது. பகைவர்களையெல்லாம் நண்பர்களாய் நடாத்தியும், எதிர்த்தோரை அடக்கி ஒடுக்கியும் ஆட்சி நடாத்தியதால் பகைவர்களின் பயம் நீங்கி நிம்மதியாக வாழ்ந்தனர். கள்வர்களின் பயமும், காமுகர்களின் பயமும் இருக்க இடமில்லாமல் நல்ல பாதுகாப்பளித்தான்.

இளந்திரையன் இவ்வாறு நாடாண்டதால் சேர, சோழ, பாண்டியர்களைவிடச்சிறந்துவிளங்கினான். அவனைப் பாடிய புலவர்களும் மற்றவர்களும் அவனது ஆட்சி நடத்தும் திறம்பற்றிப் போற்றிப் புகழ்ந்தனர். அந்தளவுக்கு அவன் ஆட்சி புரிந்தான். அவன் ஆட்சியைப் பார்த்து மற்றவர்களும் ஆட்சி நடத்தும் வகையில் ஆட்சி புரிந்தான்.

இளந்திரையன், தான் எப்படி நல்ல முறையில் ஆளமுடிந்ததோ அதேபோல் மற்ற அரசர்களும் ஆட்சிபுரிந்தால் மற்ற நாட்டு மக்களும் நலமெய்துவர், நல்லாட்சியெனப் போற்றுவர் என்பதால் மற்ற அரசர்களும் கடைபிடிக்கும் முறையில் தான் நடத்தும் ஆட்சியினை உணர்த்தினான்.

ஒருவன், சாலையில் வண்டியொன்றை ஓட்டிச்செல்லும்போது, வண்டி ஊறுபாடடைவது அவ்வண்டியின் திண்மை இல்லாததால் அல்ல; ஊர்ந்துசெல்லும் பாதையாலும் அல்ல; அவ்வண்டியின் ஊறுபாட்டிற்குக் காரணம், அவ்வண்டியை ஓட்டுவோனேயாகும். ஓட்டுபவன் வண்டி ஓட்டுவதில் அனுபவமிக்கவனாகவும், ஆற்றலுள்ளவனாகவும், போகும் வழியின் இயல்பறிந்து ஓட்டுபவனாகவுமிருந்,தால், திண்மையில்லா வண்டிகளையும் மோசமான பாதைகளிலும் வண்டிக்குக் கெடுதலில்லாமல் ஓட்டிச்சென்றுவிடுவான். அவனிடத்தில் ஓட்டும் அனுபவமும் ஆற்றலுமில்லாவிட்டால், பழுதில்லா வண்டியாக இருந்தாலும் பள்ளத்தில் விழுந்து சேற்றில் அழுந்திக் கெட்டுவிடும். ஓட்டும் அனுபவமும் ஆற்றலுமுள்ளவன், ஓட்டும் வண்டி கெடுதலின்றிச் சென்றுவிடுவதல்லாமல், அவ்வண்டியில் ஏறிச்செல்வோர்களும், அவனும் ஊறின்றிக் கடந்துவிடுவர். ஆனால் அனுபவமும் ஆற்றலுமில்லாதவன் ஓட்டும்வண்டி, போகும் வழியில் பள்ளத்தில் விழுந்து சேற்றில் அழுந்திவிடுவதுமல்லாமல், அதில் ஏறிவந்தவர்களும் அவனும் விழுந்து துன்பத்திற்குள்ளாகுவர்.

அதுபோல, ஒரு நாட்டின் வாழ்வும் தாழ்வும், வளமும் வளமின்மையும், அந்நாட்டை ஆள்வோரின் அறிவையும் அனுபவத்தையும் பொறுத்திருக்கிறது. ஒருநாட்டின் வாழ்வு தாழ்வுகளுக்கு அந்நாட்டின் பழம்பெருமைகளும் சிறுமைகளும் காரணமாகாது. அந்நாட்டை ஆள்

(4-ம் பக்கம் பார்க்க)

...ர் 21] ஆண்டு சந்தா ரூ. 8 (28—10—62) தனிப்பிரதி 16 காசு [இதழ் 9

# சீனப் படையெடுப்பை முறியடிப்போம்

"இந்திய பூபாகத்தில் காலடி ஊன்றிக் கொண்டுவிட்ட சீனர்களை முறியடித்து, வெற்றி காணும் விதத்தில், அந்தத் துறையில் அரசு மேற்கொள்ளும் எல்லா நடவடிக்கைகளிலும்; திராவிட முன்னேற்றக் கழகம் தன் முழு ஆதரவைத் தரும், பணம் திரட்டும் பணியிலும், பட்டாளத்துக்கு ஆள் திரட்டும் பணியிலும், போர் ஆதரவுப் பிரசாரத்திலும் மத்திய சர்க்காருக்குத் துணை நின்று, இந்தத் துறையில் பண்டித நேருவின் கரங்களை வலுப்படுத்தும்."

என்ற திட்டவட்டமான அறிவிப்பை, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் என்ற முறையில், C. N. A, தமக்கு வேலூரில் அளிக்கப்பட்ட விடுதலை மகிழ்ச்சி விழாப் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டிருக்கிறார்.

சிறையிலே இருந்த காலை, தமது மனதை வெகுவாக உலுக்கி, கருத்தைக் கலக்கிய ஒரு பெரும் பிரச்சினை, சீனத் தாக்குதல் பற்றிய செய்தியே என்று அவர் கூறினர். அதுபோன்ற பயங்கரமான பிரச்சினை தான் சீனத் தாக்குதல்.

எப்பக்கமும் சாய்ந்துவிடாமல் நடுநிலைக் கொள்கையுடன் நிதானமாக நடந்துகொண்டு பண்டித நேரு இந்திய பூபாகத்தில், அமளி மூளா வண்ணம் பாதுகாத்து வந்தார். சீனர்களோ, அக்ரமமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

என்று C. N. A. அவர்கள் எடுத்துக் கூறினர். இந்திய பூபாகத்தில் மட்டுமின்றி, ஜனநாயகப் பண்பு மறவாதார் உள்ள எங்கும் இன்று உள்ள கருத்து இதுவே.

நாடு இருப்பதால்தானே நாட்டுப் பிரிவினை — நாடு சீனக்காரனால் தாக்கப்படும்போது நாடு காப்பாற்றப்பட்டால்தான், பிறகு நாட்டுப் பிரிவினை என்பதற்கே பொருள் ஏற்பட முடியும்.

என்று C. N. A. எடுத்துக் காட்டியதை, வேலூர் கோட்டை வெளியில் கூடி இருந்த பெருந் திரளான கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் வரவேற்ற தன்மையே, மக்கள் மனதிலேயும் இதே கருத்து இடம்பெற்று விட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

சீனத் தாக்குதலை முறியடித்து வெற்றி கண்டாக வேண்டும்; அந்தத் துறையில், மத்திய அரசு மேற்கொள்ளும் பணிகளில், திராவிட முன்னேற்றக் கழகம் ஒத்துழைப்புத் தரும் என்று கருத்துப்பட, மாநாடுகளில் பேசியுள்ளேன். அது மட்டுமின்றி, எல்லைத் தொல்லை பற்றி, பல கட்சித் தலைவர்களுடன் கலந்துபேசப் பண்டித நேரு விரும்பி தி. மு. கழகத்தின் சார்பாக வருகிற வாய்ப்பை எனக்களித்து நான் வேலூர் துணைச் சிறையில் இருந்தசமயம் தந்தி அனுப்பியபோது, வர இயலா நிலையை விளக்கியதுடன், கழக ஆதரவு அவருக்கு உண்டு என்பதை எடுத்துக்காட்டும் கருத்துடன் பதில் தந்தியும் கொடுத்திருக்கிறேன்.

என்ற தகவல்களையும்கூறி, கழகம் இந்த நேரத்தில் மேற்கொள்ளவேண்டிய கடமைகளைத் தெளிவுபடுத்திக் காட்டியுள்ளார்.

சீனத்தாக்குதல் குறித்து பீதிகொள்ளத் தேவை இல்லை, ஆனால், அது மிகச்சாதாரணப் பிரச்சினை என்று எண்ணும் அலட்சியப்போக்கும் கூடாது. அமைதி இழக்காமல், துணிந்து நின்று, வெற்றிபெற்றாகவேண்டும். இதற்குத் தேவையான மனதிடம் மக்களிடம் இருக்கச்செய்வது எல்லாக் கட்சிகளுக்கும் ஏற்பட்டுள்ள தலையாய கடமையாகும்.

இந்திய பூபாகத்தில் அடியெடுத்துவைத்துப் போர் தொடுத்த பகைவன் எவனும் தன் புலத்திற்கு உயிரோடு திரும்பியதில்லை. புதுமையான இரத்தக்கரை வரலாற்றை உருவாக்க எண்ணுகின்ற சீனத்தான், தன் புதைகுழிக்குத் தானே இடம் அமைத்துக்கொள்கிறான் போலும்.

இந்த மண்மீது போர்தொடுத்து வந்தவன் புறமுதுகிட்டு ஓடும்வரை ஓயோம் என்ற சூளுரையோடு நேரு சர்க்

காரின் கையை வலிமையுள்ளதாக்க இங்நாட்டிலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டிய நேரம் இது.

உரிமைக்காக எழும் சச்சரவுகளை மனதில்வைத்துக்கொண்டு, பொது எதிரியை வரவேற்கும் போக்கில் நடந்துகொள்வதுபோன்ற துரோகச்செயல் வேறெதுவும் இருக்கமுடியாது. நாடு, நன்னெறி, ஜனநாயகம் ஆகியவைகளுக்கு ஆபத்து உண்டாக்கக்கூடிய விதத்தில் எதிரியின் போர் நடவடிக்கைகள் ஏற்பட்டுவிட்ட பின்னர் நாம் வறிதே வேடிக்கை பார்த்துக்கொண்டு, 'நமக்கேன் இந்தத் தொல்லை எல்லாம்' என்று வாளா இருப்போமானால், பொதுச்சொத்தான இந்திய பூபாகம் முழுவதுமே பறிபோய்விடும்.

அப்போது நமக்குக் கிடைக்கவேண்டிய பாகமும் எதிரியிடம் சிக்கிவிடும்.

எனவே, முதலில் பொதுச் சொத்தைப் பாதுகாப்போம். அதற்கு ஒரு அழிவும் நேரிடாமல் பார்த்துத் கொள்வோம். பொதுச் சொத்துக்கு அழிவு ஏற்படாமல் பாதுகாக்கப்பட்டபின்னர், நமக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய பாகத்தை—நாம் — ஜனநாயக முறையில், அறவழி நின்று, பெற்றுக்கொள்வோம்.

அசைக்க முடியாத இந்த உறுதியோடு நாம், தற்சமயம் ஏற்பட்டுள்ள சீன ஆக்கிரமிப்பை முறியடிப்பதில் மத்திய சர்க்காருக்கு எல்லாவித ஒத்துழைப்பையும் தந்து வெற்றி முரசு கொட்டச் செய்வோம்.

வெற்றி நமதே—நமக்கே என்ற தளராத நம்பிக்கை நமக்கிருக்கும்போது, நியாயமும், ஐ. நாவின் நன்மதிப்பும் பேராதரவும் இருக்கும்போது, உலகிலே உள்ள நன்மதியாளரின் வெறுப்புக்கு ஆளாகும் முறையில் நடந்து கொண்டு வரும் சீனர்களின் வெறித்தனம் இங்கு வெற்றி பெறாது.

மிகச் சரியான நேரத்தில், கழகம் மேற்கொள்ள வேண்டிய நெறியினைத் தெளிவாகவும் திட்டவட்டமாகவும் C. N. A. எடுத்துக் காட்டியுள்ளதை நாடும் நல்லோரும் பாராட்டி வரவேற்கிறார்கள் என்பதை உணர்ந்து பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

---

2-ம் பக்கத் தொடர்ச்சி

வோன் ஆற்றலும் அனுபவமிக்கவனுமாக இருந்தால் எவ்வளவு கேடு கெட்ட, தாழ்வுற்ற—பின்தங்கிய—நாடாக இருந்தாலும், நல்ல நிலைமையடைந்து முன்னணிக்குவரும். அங்நாட்டில் வாழும் மக்களும் நல்வாழ்வு வாழ்வர். அங்நாட்டை ஆள்வோனையும் போற்றுவர். ஆனால் நாட்டை ஆள்வோன் அனுபவமில்லாதவனாகவும், ஆற்றலில்லாதவனாகவும், ஆண்மையற்றவனாகவுமிருந்தால், எத்தகைய நல்ல நாடாக இருந்தாலும், வளமிக்க முற்போக்குள்ள நாடாக இருந்தாலும் சீர்கெட்டுவிடும்.

அங்நாட்டில் வாழும் மக்களும் துன்பமடைவர். அங்நாட்டில் வறுமை, பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும்.

சீரோடும் சிறப்போடும் உலக நாடுகளின் மத்தியில் பீடுநடை போட்ட நாடுகள் வீழ்ச்சியுறுவதும், சாதாரணமாகப் பெயரும் பெருமையும் தெரியாமலிருந்த நாடுகள் சில நேரங்களில் முன்னேற்ற நாடாகவும் உலக நாடுகள் அனைத்தும் நோக்கும் வகையில் ஏற்படக் காரணம் அந்தந்த நாட்டை ஆள்வோரின் ஆற்றல் ஆற்றலின்மையிலேயாகும்.

அன்று இளந்திரையன் கூறிய இந்த முறையைக் கடைப்பிடித்து இன்று நாட்டையாண்டால் நாடும் சீர்பெறும், நாட்டு மக்களும் நல மெய்துவர் பிறநாடுகளும் போற்றும்.

இளந்திரையன் கூறிய கருத்தைத் தான் இதுகாறும் பார்த்தோம். பாடலைக் காணவேண்டுமல்லவா? பலரும் படித்துப் பயனுறும் வகையில் புறநானூற்றில் இருக்கின்றது. அதனை இங்கு காண்போம்!

"கால் பார் கோத்து, ஞாலத்து இயங்கும்
காவற் சாகாடு உகைப்போன் மாணின்
ஊறு இன்றாகி, ஆறுஇனிது படுமே;
உய்த்தல் தேற்றானாயின், வைகலும்
பகைக்கூழ் அள்ளல் பட்டு
மிகப்பல் தீ நோய் தலைத் தலைத்
தருமே"

—புறநானூறு 185.

---

## சந்தாதாரர்களுக்கு

ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்.

முகவரியை மாற்றும்படி எழுதுபவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.

**பொறுப்பாளர்.**

# "யாருக்காக வாழ்வான்....?"

"அவன் ஏன் அழுதான்?"

இப்படித்தான் எல்லோரும் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

அவன் வாய்திறந்து எதுவுமே சொல்லவில்லை. அதனால் எவருக்குமே உண்மை தெரியவில்லை.

ஆனால்; அவன் தனக்குள் சொல்லிக்கொள்கிறான்.

"நான் என் உள்ளத்தைக் காலின்கீழ் போட்டு மிதித்துக் கொண்டு நடந்து வந்தேன். அதனால் இப்பொழுது அழுதுகொண்டிருக்கின்றேன்."

அவன் சிறைக் கம்பிகளுக்கிடையே இந்த நினைப்போடுதான் எப்படியோ மூன்று ஆண்டுகளைக் கடத்திவிட்டான்.

செய்யாத குற்றத்திற்காக அவன் பெற்ற தண்டனை மூன்றாண்டுகள் கடுங்காவல்!

அப்படி அவன் என்னதான் குற்றம் செய்துவிட்டான் மூன்று ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை பெற?

கொலை செய்தானா? கொள்ளையடித்தானா?

கற்பழித்தானா? கயமைத்தனம் புரிந்தானா?

அரசாங்கத்தை எதிர்த்தானா? அடுத்துக் கெடுத்தானா?

என்ன செய்தான்? எதற்காகத் தண்டிக்கப்பட்டான்?

"அவன் தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தான். கையும் மெய்யுமாகக் கடற்கரையில் பிடிபட்டான். கேட்ட கேள்விகளுக்கெல்லாம் அவன் மௌனம் சாதித்தான். அந்த மௌனம் ஒன்று போதுமே அவன் செய்ய முயன்ற குற்றத்திற்குச் சான்று."

அரசாங்க வக்கீலின் இந்த வாதம் தான் அவனைக் குற்றவாளியாக்கியது.

அட ஆண்டவனே! இது உண்மை தானா? நீயொருவன் இருப்பது உண்மையானால், உன் பிள்ளைகளில் ஒருவன் அநியாயமாகத் தண்டிக்கப் பட்டதைத் தடுத்தல்லவா இருக்க வேண்டும்?

செய்தாயா அதை?

ஏன் செய்யவில்லை?

அவன் தற்கொலையா செய்து கொள்ள முயற்சி செய்தான்?

உன் உள்ளத்திற்குத் தெரியுமே அவன் என்ன செய்தான் என்று?

கடந்த கால நினைவுகள் நெஞ்சில் நிறைந்து விட்டதால், வேதனை பீறிட

மாரா. தமிழ்ச்செல்வன்

டெழவும் மனம் நொந்து கடற்கரையில் நின்றுகொண்டு கண்ணீர் வடித்துக்கொண்டல்லவா இருந்தான்?

அவன் உள்ளம்தான் உனக்குத் தெரியுமே?

ஏனென்றால் நீ அவன் தந்தையல்லவா?

இருந்தும் அவன் தண்டிக்கப்பட்டானே! ஏன்? ஏன்? ஏன்?

விடை கிடைக்கவில்லை. அவன் வேதனையோடு, மூன்று ஆண்டுகள் சிறையில் வதைபட்டான்.

நேற்றோடு மூன்றாண்டுகளும் முற்றுப் பெற்றுவிட்டன.

இன்று அவனுக்கு விடுதலை.

கீழ்வானில் செங்கதிரோன் உதித்துவிட்டான். சிறையின் கதவுகள் திறக்கப்பட்டுவிட்டன. அதோ! எலும்பும் தோலுமான ஓர் உருவம் தள்ளாடியவாறு வெளிப்படுகிறது.

அந்த உருவம்தான் அவன்!

அவன்தான் வேலவன்!!

ஈழம் ஈன்றெடுத்த இளவல்!

அவனா இப்படி உருமாறிவிட்டான்?

சிறைக் கதவுகள் மீண்டும் மூடப்பட்டு விட்டன. ஆனால்; அவன் இதயக் கதவுகள்.........? அதுதான் திறந்தே கிடக்கிறதே!

திறந்த வெளியை வெறித்து நோக்கினான். வேதாந்தியைப் போல் தனக்குள் சிரித்துக் கொண்டான். ஞானியைப் போல் அலட்சியமாகச் சிறைக் கூடத்தைத் திரும்பிப் பார்த்துவிட்டு நடந்தான்.

நடைபாதை நீண்டுகொண்டே இருந்தது. அவனும் நடந்து கொண்டே இருந்தான்.

அவன் தனக்குள் சொல்லிக் கொண்டான். "ஈழத்தில் பிறந்து, வளர்ந்து, வளத்தோடு வாழ்ந்தவனின் வரலாறு இப்படியா ஆக வேண்டும்?"

அவன் வாழ்க்கைப் பாதையில் தான் எத்தனை மேடு பள்ளங்கள்! வேதனை நிரம்பிய நிகழ்ச்சிகள்!! சோதனைகள்!!!

எல்லாவற்றையுமே கடந்து வந்து விட்ட அவன், இப்பொழுது தன்னை ஒரு மனிதனுக்கிக் கொண்டான்.

அவன் உள்ளம் வறுமையைக் கண்டு வாடுவதில்லை.

வசவுகளைக் கேட்டுக் குமுறுவதில்லை.

வன்நெஞ்சர்களின் செயல் கண்டு வேதனைப்படுவதில்லை.

தன்னை வஞ்சித்தவர்களையும் வாழவைத்திருக்கின்ருன்.

எதிரிகளையும் நண்பர்களாக்கி இருக்கிருன்.

நண்பர்கள் உருவிலே நடமாடிய வஞ்சகர்களையும் பொறுமையோடு, கண்டும் காணுதவன்போல் கண்யத்தோடு வாழ்ந்திருக்கின்ருன்.

இந்தச் சூழலில் வாழ்ந்துவரும் அவனுக்கு இப்பொழுது ஒரு தொழில் இருக்கிறது. அதற்கேற்ற வருவாய் வருகிறது. ஆம்! இயந்திரங்களுக்கு மத்தியிலே இயந்திரமாக இயங்கி வருகிருன் அவன்.

இப்படி இருப்பதைத்தான் இப்பொழுது அவன் விரும்புகின்ருன். இதில்தான் இன்பத்தையும் காண்கின்ருன். காரணம்? இதயமற்ற மனிதர்களுக்கு மத்தியிலே வாழ்வதைவிட இயந்திரங்களுக்கு மத்தியிலே இதயமுள்ள மனிதனுக வாழலாமல்லவா?

இந்த நினைவிலே ஊசலாடும் அவன் சில சமயங்களில் இதயமற்ற மனிதர்களுக்கு மத்தியிலேயும் நடமாடவேண்டி இருக்கிறது. இதற்காக அவன் தன் இதயத்தையும் இரும்பாக்கிக்கொள்ள விரும்பவில்லை. பொறுமையோடு எல்லாவற்றையும் ஏற்று, அமைதியாக வாழத் தன்னைத் தயாராக்கிக் கொண்டான்.

பகற்போதெல்லாம் இயந்திரங்களோடும் மனிதர்களோடும் உறவாடிக்கொண்டிருக்கும் அவன், இரவிலே இயந்திரங்களுக்கிடையே தனி மனிதனுய் அமர்ந்திருக்கின்ருன். அதனுல் சிந்திக்கின்ருன். சிந்தனையிலிருந்து பிறக்கும் சிறந்த கருத்துக்களை எல்லாம் எழுத்துருவாக்குகின்ருன். அவைகள் சில பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அது கண்டு அவன் மகிழ்கின்ருன்.

காலம் கடந்துகொண்டிருந்தது. எவ்வித சலசலப்புமின்றி அவன்தன் வாழ்க்கை ஏட்டில் மேலும் மூன்று ஆண்டுகளைக் கடத்திவிட்டான்.

ஈழத்திலிருக்கும் தன் தாயையும் உடன்பிறந்தவர்களையும் பார்க்க வேண்டுமென்று இதயம் துடிக்கும். ஆர்வம் பொங்கி எழும். அடுத்த கணம் அவன் தன்னிலையை நினைத்துப் பார்ப்பான்; எல்லாவற்றையுமே மறந்துவிடுவான். இதயத்தைமட்டும் இரும்பாக்கிக்கொள்வான்.

பந்தபாசத்தை எல்லாம் தூக்கி எறிந்துவிட்டுத், தனிமனிதனுய் வாழவேண்டும் என்று நினைப்பான். தாய்ப்பாசம் தலைதூக்கி நிற்கும். எல்லாவற்றையுமே மறந்துவிடுவான். பெற்றதாயின் இனிய நினைவுகளிலே தன்னை மறந்துவிட்டஅவன் அழுதுகொண்டிருப்பான். அப்போது தான் அவனுக்குச் சற்றுச் சாந்தி கிடைக்கும்.

ஆம்! அவன் தலையணையைக் கேட்டால், அது சொல்லும் கதை கதையாக, எத்தனை இரவுகள் அவன் தன்னைக் கண்ணீரால் கழுவி இருக்கிருன் என்று.

சாவின் சந்நிதானத்திலேதான் சாந்தி கிட்டும் என்று எல்லோரும் சொல்கின்ருர்கள். ஆனுல் அவன் மட்டும் அதைக் கண்ணீரிலேதான் பெறுகிருன்.

அன்று அவனுக்கு அவன் அண்ணனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் "தாய் மரணப் படுக்கையிலிருக்கிருள். உடன் புறப்பட்டு வரவும்" என்றிருந்தது.

இதைப் படித்ததும் அவன் இதயமே ஒருகணம் வெடித்துவிடும் போலிருந்தது. இரத்த ஓட்டமும் நின்றுவிட்டதுபோலும்! கற்சிலையாக நின்றுவிட்டான். கண்கள் மட்டும் தம் பணியைச் செய்துகொண்டிருந்தன. கையிலிருந்த கடிதமும் கண்ணீரால் நனைந்துவிட்டது.

மறுநாளிலிருந்து இலங்கை செல்வதற்கான பணிகளில் தீவிரமாகச் செயல்பட ஆரம்பித்தான். பெரிய போலீஸ் அதிகாரி அலுவலகத்தில் 'பாஸ்போர்ட்'டுக்காக மனு கொடுத்தான். அவர்கள் கேட்ட எல்லா ஆதாரங்களையும், நற்சான்றுகளையும் காலதாமதமின்றிச் சேகரித்துக் கொடுத்தான்.

பாடுபட்டதின் பலன் பத்தே நாட்களில் 'பாஸ்போர்ட்' கிடைத்துவிட்டது. 'பாஸ்போர்ட்' கிடைத்ததும் அவன் இலங்கைக்கே சென்றுவிட்டதைப்போல் மகிழ்ந்தான்.

அன்றே நிலையை விளக்கி இலங்கைத் துணைத் தூதராலயத்தில் அனுமதி (விசா) கேட்டு விண்ணப்பம் செய்தான்.

அவன் தன் அறைக்குத் திரும்பிய போது அவனுக்காக ஒரு தந்தி காத்திருந்தது. பதைபதைக்கும் நெஞ்சத்தோடு அதைப் பிரித்துப்படித்தான்.

"தாயின் நிலை ஆபத்தாக இருக்கிறது. உடன் வரவும்."

தந்தியை எடுத்துக்கொண்டு மீண்டும் தூதராலயம் சென்ருன். பயனில்லை. "நாளைக் காலை விசாரணை. வாருங்கள் பார்க்கலாம்" என்ருர்கள்.

இதயத்தில் பீறிட்டெழுந்த வேதனையை நெஞ்சில் நிறுத்திக்கொண்டு அமைதியாக வெளியேறினுன்.

கண்களிலே கண்ணீர்த் துளிகள் துளிர்த்தன. ஆண்மகனல்லவா? அழக்கூடாது என்று பொங்கிவரும் அழுகையை அடக்கிக்கொண்டான்.

மறுநாள் குறிப்பிட்ட நேரத்திற்கு தூதராலயத்திற்குச் சென்ருன். துணைத் தூதர் விசாரணையை ஆரம்பித்தார்.

அவனைக் கேட்ட முதல் கேள்வி- 'உங்களுக்குச்சிங்களம் தெரியுமா?' சிங்களத்திலேயே கேட்டார்.

அதற்கு அவனும் "ஓரளவுக்குப் பேசத் தெரியும்" என்று சிங்களத்திலேயே பதில் சொன்னுன். அவரது மொழிப்பற்றைக் கண்டு உள்ளுக்குள் மகிழ்ந்தான்.

"நான் அயல்நாட்டில் என்மொழி பேசப்படுவதைக் கேட்கும்பொழுது எவ்வளவு மகிழ்ச்சியடைகின்றேன் தெரியுமா? உம்... இந்த நாட்டிற்கு வந்து ஏழாண்டுகளாகியும் கற்ற மொழியை மறக்காதிருக்கின்றீர்களே! அதற்காக நான் உங்களைப் பாராட்டுகின்றேன்" என்ருர் சிங்களத்திலேயே.

"அதுதான் தமிழனுக்குரிய தனிப் பண்பு" என்று பெருமிதத்தோடு கூறினுன். பின் சொன்னுன்:

"மாற்ருர் தன் மொழியைப் பேசுவதைக் கேட்கும்பொழுது எல்லோருக்குமேதான் மகிழ்ச்சி பிறக்கும்."

உடனே அவர் பேச்சை மாற்றினுர். "உங்களுக்கு ஆங்கிலம்..."

"தெரியும்."

"ஓ.....! மறந்துவிட்டேன். இனி நாம் ஆங்கிலத்திலேயே பேசலாம்" என்ருர்.

"அதுதான் நல்லது" என்று ஆங்கிலத்தில் சொன்னுன். அதன்பின்

அவர் ஆங்கிலத்திலேயே கேள்விகளை எல்லாம் கேட்டார். அவனும் பதில் சொன்னான்.

விசாரணை முடிந்தது. முடிவாக அவர் கூறினார், "அங்கிருந்து உங்களுக்கு உறுதிக் கடிதமும், ஜாமீன் கடிதமும் வந்தால்தான் நாங்கள் 'விசா' கொடுக்க முடியும். ஆகவே உங்கள் தமயனாருக்குக் கடிதம் எழுதுங்கள்" என்று.

அவனும் உடனே தன் அண்ணனுக்கு நிலையை விளக்கிக் கடிதம் எழுதினான். பதிலுக்காகக் காத்திருந்தான்.

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. ஒரு வாரமும் முடிந்து மறு வாரமும் ஆயிற்று. கடிதத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு 'தந்தி' வந்தது.

தந்தியைக் கண்டதும் அவன் செயலற்றுப் போனான். இயந்திரம் போல் நடுங்கும் கரங்களால் பிரித்துப் படித்தான்:- "தாய் இறந்துவிட்டார்; நாளை சவ அடக்கம்"

"அம்மா!" என்று அவன் அலறவில்லை. இதயம்தான் அலறும் சக்தியை இழந்துவிட்டதே!

செயலிழந்துவிட்ட அவன் விழிகள் புனலருவியாயிற்று.

அழுதான், அழுதான், அழுதுகொண்டே நின்றிருந்தான்.

கூட இருந்த நண்பர் அழைத்துச் சென்று அமர வைத்தார்.

தன் உணர்வுகளை எல்லாம் இழந்துவிட்ட அவன், எடுப்பார் கைப்பிள்ளைபோல் நடத்திச் செல்லப்பட்டான்.

அவன் இருதயத் துடிப்பு இப்பொழுது குறைந்திருந்தது.

கண்களில் அழுவதற்குக் கண்ணீர் இல்லை.

பேசும் சக்தியை இழந்திருந்தான்.

பெற்றுப் பேணி வளர்த்து, தன் உயிரையே அவன்மேல் வைத்திருந்த பெருந்தெய்வம் மறைந்துவிட்டது.

அந்தத் தெய்வத் திருவுருவத்தைக் கடைசியாக அவன் பார்ப்பதற்குக் கூடக் கொடுத்துவைக்கவில்லை.

அந்தத் தெய்வத்தின் கடைசி விருப்பத்தை — இல்லை, ஆசையை அவனால் நிறைவேற்றி வைக்கமுடியவில்லை,

தன் கடைசி மகனின் மணக் கோலத்தைக் கண்டு களிக்கவேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த அந்தத் தாயின் ஆசை நிராசையாகிவிட்டது.

தன் கடைசி மகன்தான் தனது கடைசிக் காலத்தில் கஞ்சி ஊற்றுவான் என்று அந்தத் தாய் கண்ட கனவுகள் கனவாகவே போய்விட்டன.

தனது இறுதி மூச்சைத் தனது கடைசி மகனின் மடியிலே விட வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த அந்தத் தாயின் நினைவுகள் கனவாகிப் போயின.

நினைவிலே காணமுடியாதவைகளைக் கனவிலே கண்டு கண்ணீர் விட்டுக்கொண்டே அந்தத் தாய் இயற்கை வசமாகிவிட்டாள்.

ஏக்கத்தையெல்லாம் இதயத்திலேயேஇறுத்திக்கொண்டு வேதனைப் புழுவாகத் துடிதுடித்துச் செத்து மடிந்துவிட்ட அந்தத் தெய்வத்தை நினைத்து நினைத்து நித்தம் நித்தம் அவனிதயம் செத்துப் பிழைத்துக் கொண்டிருக்கிறது.

பெற்றெடுத்த பெரும் தெய்வத்தின் பிணத்தைக்கூடப் பார்க்கக் கொடுத்துவைக்காத அவன், தன் தாயின் இறுதிக் கடனுக்காவது சென்றுவிடலாமென்று பாடுபட்டான். அதைத்தான் அவனுடைய அண்ணனும் அறிவுறுத்தி இருந்தார்.

அவர்கள் கேட்டிருந்த உறுதிக் கடிதமும் ஜாமீன் கடிதமும் இலங்கையிலிருந்து அவனுடைய அண்ணன் அனுப்பி இருந்தார்.

அவைகளைப் பெற்றுக்கொண்ட அவன் தனக்கு இலங்கை செல்ல அனுமதி கிடைத்துவிட்டதைப் போல் நினைத்து மகிழ்ந்தான்.

தூதராலயத்திற்குச் சென்றபின் தான் தன் எண்ணங்களும் வானத்திலே தோன்றி மறையும் மின்னலைப் போலாகிவிட்டதை உணர்ந்து வருந்தினான்.

விசாரித்து, அதன் முடிவு தெரிந்த பின்னரே விசா தரமுடியும் என்று கூறிவிட்டார்கள்.

அவன் நெஞ்சத்தில் நிறைந்திருந்த ஆசைகளையும் இன்பக் கனவுகளையும் ஒரு நொடியில் சிதறடித்துவிட்டார்கள். நெஞ்சத்தை அன்று புண்ணாக்கியவர்கள் இன்று வேல் கொண்டு குத்திச் சீழ் வடியச் செய்துவிட்டார்கள்,

சீழ்வடியும் இதயத்திற்கு இனிப்புனுகு தடவினால் மட்டும் போதுமா?

எங்கே தன் தாயின் இறுதிக் கடனுக்குக்கூட போகமுடியாமல் போய்விடுமோ என்று அவன் உள்ளம் அஞ்சிக்கொண்டிருந்தது.

அவன் அஞ்சியது வீண்போகவில்லை. அந்த நாளும் வந்தது. அவன் வருவான் வருவான் என்று எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றமடைந்துவிட்ட அவன் அண்ணன், தன் இறுதிக் கடிதத்தை எழுதியிருந்தார். ஆம், அவர் அப்படித்தான் குறிப்பிட்டிருந்தார் 'இறுதிக்கடிதம்' என்று.

"நீ வருவாய் வருவாய் என்று இவ்வளவு நாட்களும் தாயின் இறுதிக் கடனைச் செய்யாது, ஒத்தி வைத்துக்கொண்டே இருந்தேன். இனி நான் உனது வரவுக்காகக் காத்திருக்கப்போவதில்லை. காரணம் நீ வரவேண்டுமென்று நினைத்திருந்தால் எப்படியும் வந்திருப்பாய்— வந்திருக்கவேண்டும்.

"இப்பொழுது வருவதற்கு விருப்பமில்லாத நீ, ஏதேதோ சாக்குப் போக்குகள் காட்டி எழுதிக்கொண்டிருக்கிறாய். தாயின் இறப்பிற்கு வராத நீ அவர்களின் இறுதிக் கடனுக்கு மட்டும் எப்படி வரப்போகின்றாய்? அல்லது உடன் பிறப்புக்களைத்தான் பார்க்கவரப்போகின்றாயா?

"தாயின் இறப்போடு எல்லாமே முடிந்துவிட்டது. அதோடு உன் கதையும் முடிந்துவிட்டது. ஆம், தாயின், இறுதிக்கடனோடு உன் இறுதி நினைவும் முற்றுப்பெற்றுவிடும். இதை உனக்கு அறிவிக்கும் இறுதிக் கடிதம் இதுதான்.

"ஆம்! என் இறுதிக்கடிதம் இதுதான், நீ வரவிரும்பினால் ஆகஸ்டு திங்கள் பதினான்கிற்குள் (14-8-62) வந்துவிடு. ஏனென்றால் தாயின் இறுதிக்கடனைப் பதினான்காம் திகதிதான் வைத்திருக்கிறேன். இதற்கு மேல் நான் உனக்கு எதையுமே எழுத விரும்பவில்லை."

இந்தக் கடிதத்தைப் படித்த அவன், என்ன பாடுபட்டிருப்பான் என்பதை நீங்களே சற்று நினைத்துப்பாருங்கள். அவன் இதயமே வெடித்தல்லவா இருக்கவேண்டும்.

புண்பட்ட நெஞ்சத்திலே புரையோடிவிட்டது. புரையோடிவிட்ட

(9-ம் பக்கம் பார்க்க)

# மார்க் ட்வைன்

கண்ணன்

அமெரிக்கர் சூடிக்கொண்ட புனைப் பெயர்களில் எல்லாம் தலை சிறந்த புகழ் படைத்தது "மார்க் ட்வைன்" என்பது. மார்க் ட்வைனின் இயற் பெயர் சாமுவேல் லாங் ஹார்ன் கிளமென்ஸ். இவர் 1835 நவம்பர் 30ல் பிறந்தார். மிஸௌரி மாநிலத்தில் புளோரிடா என்னும் சிற்றூரில் இவர் பிறந்தார். தந்தையார் வழக்கறிஞராகவும், நிலத் தரகராகவும் தொழில் நடத்தியும் ஏதும் வருவாய் இல்லாத வறியவரானார். 1839ல் குடும்பம் ஹனிபல் என்னும் ஊருக்குக் குடிபெயர்ந்தது; இது அதே மாநிலத்தில் மிஸிஸிப்பி ஆற்றின் கரையில் உள்ள ஒரு சிறிய நகர். இந்த ஆறும் அதில் ஓடம் ஓட்டும் தோணிக்காரனும் பின்னால் உலகமெலாம் பெயர் பெற்றது மார்க் ட்வைனின் எழுத்தினால்தான்.

பன்னிரண்டாவது வயதில் தந்தையை இழந்ததும், மார்க் ட்வைன் படிப்பை விட்டுவிட்டு, அச்சுத் தொழிலில் பயிற்சி வேலையாளாக அமர்ந்தார். எழுத்தினால் பெயர் பெறுமுன், எண்ணிறந்த அமெரிக்க எழுத்தாளர்கள் கணக்கிறந்த வேலைகள் செய்திருக்கிறார்கள். அதே போல், மார்க் ட்வைனும் படகோட்டியாகவும், படைவீரராகவும், சுரங்கத் தொழிலாளியாகவும் பணியாற்றியவராவார். முப்பதாவது வயதில் இவர் நகைச்சுவை ததும்பும் நூல்கள் பல எழுதலானார். அன்று அமெரிக்காவில் பெயர் பெற்று விளங்கிய நகைச்சுவை எழுத்தாளர் ஆர்ட்டெமுஸ் வார்டு என்பவர் இவருக்கு ஊக்க மூட்டினார். இச்சமயத்தில்தான் இவர் மார்க் ட்வைன் என்று புனைப்பெயர் பூண்டதும். மார்க் ட்வைன் — விறுவிறுப்பாகக் கதை சொல்லும் வல்லவன்; சாமுவேல் கிளமென்ஸ் — சுடுசொல் பொறுக்காத இனிமையான நண்பன்.

1867ல் அவரது முதல் புத்தகம் வெளியான பிறகு, மார்க்ட்வைன் விரிவாகப் பிரயாணம் செய்யலானார். ஏராளமாக விரிவுரைகள் நிகழ்த்தினார்; ஐரோப்பிய நாடுகள் பலவற்றையும் பாலஸ்தீனத்தையும்போய்க் கண்டார். 1869ல் வெளியான "The Innocents Abroad." 1870ல் வெளியான 'Roughing It' இவை இரண்டும் இவர் கிழக்கும் மேற்கும் செய்த பிரயாணத்தைப் பற்றியவை. சூதுவாதற்ற எழுத்து; இந்நூல்களின் சிறப்பான கவர்ச்சிக்கு இதுவே காரணமாகும்.

1870ல் இவருக்கும் ஒலிவியா லாங்டன் என்னும் அம்மையாருக்கும் திருமணமாயிற்று. கனக்டிக்கட் மாநிலத்தில் ஹார்ட்போர்டு நகரில் இவர்கள் குடித்தனம் நடத்தினார்கள். 1873க்கும் 1890க்கும் இடைப்பட்ட காலத்தில் இவர் ஏராளமாக எழுதிக் குவித்தார். இவற்றில் முதல் இரண்டும் படகோட்டியாக இருந்த காலத்தில் இவர் பெற்ற அநுபவத்தில் தோன்றியவையாகும். மூன்றாவது நூல் அமெரிக்க நாவல்களிலெல்லாம் தலைசிறந்தது என்பது பலரது கருத்து. இதைப்பற்றிக் கவிஞனும் தத்துவ அறிஞனும் வாழ்க்கை வரலாற்றாசிரியனுமாகிய மாக்ஸ் ஈஸ்ட்மன் பின்வருமாறு கூறினார்: "இது மனிதனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்புகளைப்பற்றிய கவிதை;...... உலகப் போக்கை நையாண்டி செய்யும் நூல்; அது மிக நுண்மையான முறையில் எடுத்தியம்பும் கதையில் அந்த நையாண்டி மிகத் திறமையாகப் பக்குவம் வாய்ந்த நையாண்டியாகவும் இலக்கியக் கலையின் அழகு மிக்க படைப்புக்களில் ஒன்றாகவும் அது விளங்குகிறது."

சிறுவன் ஒருவன் தன்னை வளர்ப்பவர் வீட்டிலிருந்து ஓடிவிடுகிறான்; தப்பி ஓடும் ஓர் அடிமையுடன் சேர்ந்துகொண்டு மிஸிஸிப்பி ஆற்றில் ஒரு கட்டுமரத்தில் செல்கிறான்; அன்றைய சமுதாய நிலைபற்றி ஆசிரியர் கருத்துக்களைத் தன்னையறியாமல் உரைப்பவன் இந்தச் சிறுவனாவான். ஆனால், இதுவல்ல இந்நாவலின் உண்மையான அழகு; ஆறும், அங்குள்ள இரவும், மண்ணின் மணமும்—ஆசிரியர் இளமையில் கண்டவாறு இந்நூலில் அப்படியே தோன்றுகின்றன; அதுதான் இந்நூலின் சிறப்பு. இவ்வாறு இவற்றை மறுபடியும் கண்ணெதிரே உயிருள்ளவையாகக் கொண்டு நிறுத்தும் அமெரிக்க நாவல் வேறெதுவும் இல்லை.

புத்தகம் எழுதி வெளியிட்டுப் புதையல் கண்டார் மார்க்ட்வைன்; ஆனால் ஒன்றும் தங்கவில்லை; காரணம் புத்தகவெளியீட்டுத்துறையில் சரியான முறைகளைக் கைக்கொள்ளாததும், திருத்தமுறை அமையாத அச்சுக்கோர்க்கும் இயந்திரம் ஒன்றில் பணத்தைக் கொட்டியதுமாகும். 1895-ல் இவர் ஓட்டாண்டியானார். கடனைத் தீர்க்கவேண்டி, விரிவுரைச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். விரிவுரைகளும் புத்

கங்களும் கொடுத்த பணத்தைக் கொண்டு கடன் முழுவதும் அடைத்தார். பின்னர் பழையபடி பெரும் பணக்காரர் ஆனார். எனினும் முன்பு திவாலானதும், தனது மூத்தமகள் இறந்ததும் இவர் மனத்தையும் உடல் நலத்தையும் முறித்துவிட்டன. கடைசி மகளும் நோயுற்ருள்; மனைவி தீராநோய்வாய்ப்பட்டு 1904-ல் காலமானுள். பின்னர் மார்க்ட்வைன் எழுதிய நூல்களில் எல்லாம் மனச்சோர்வு தட்டுவதைக் காணலாம்.

1910-ஏப்ரல் 21-ம் தேதி மார்க்ட்வைன் காலமானுர் அவரைப்பற்றி எத்தனையோபேர் எவ்வளவோ எழுதியிருக்கிருர்கள். அவர் எழுத்து ஜனநாயகப் பயன் அளித்தது என்கின்ருர் பெர்னுர்டு டிவோட்டோ. பெரிய எழுத்தாளராக மட்டுமல்லாமல், பொதுமக்கள் விரும்பும் எழுத்தாளராகவும் விளங்கிய முதல் எழுத்தாளர் மார்க்ட்வைன்தான். இதுவே ஒரு சிறப்பாகும். இதை விடச் சிறப்பானது என்னவெனில் இவர் நூல்களால் வெள்ளிடைமலையாகவும் இலைமறை காயாகவும் விளங்கும் ஜனநாயகமாகும். சாதாரண அமெரிக்க இயல்புகளை எடுத்துக்காட்டி, அவர்கள் ஆவல், அச்சம், ஒழுங்கு, ஒழுங்கின்மைகளை அவர்களுடனிருந்து இயம்பும் மிக உயரிய அமெரிக்க நூல்கள் இவையே.

அமெரிக்காவின் நகைச்சுவைக்கு மார்க் ட்வைன் தலைசிறந்த எடுத்துக்காட்டாவார் என்பதைப் பலர் வலியுறுத்துவர். இலக்கிய வரலாற்று அறிஞர்கள் மற்றும் பலர் மார்க் ட்வைனுக்கும் ஆபிரகாம்லிங்கனுக்குமுள்ள வியக்கத்தக்க ஒற்றுமைகளை எடுத்துக் காட்டுவர். இருவரும் இளமையில் வாழ்ந்த இடம் புதியதாய்க் காடுகளை அழித்து, வீடும் குடியுமாகிய மக்கள் வாழ்ந்த இடமாகும். தன்னம்பிக்கையும் துணிந்து செயலாற்றும் நினைப்பும் இருவரிடமும் இயல்பாக வேரூன்றியிருந்தன. இத்தகைய குணங்கள் லிங்கனிடத்தில் செயலில் விளங்கின; மார்க் ட்வைனிடத்தில் எழுத்தில் இலங்கின. சிந்தனையாளர் என்ற முறையில் மார்க் ட்வைன் முக்கியமானவர் அல்ல என்பது உண்மை. எதையும் கேலி பண்ணத் தயங்காத இயல்புள்ளவர்கள் அமெரிக்க மக்கள். இத்தகைய நாட்டுப் பண்பை நன்கு எடுத்துக் காட்டும் திறன் மிக்கவர் மார்க்ட்வைன். இவ்வகையில் அமெரிக்க எழுத்தாளர் எல்லோரையும் மிஞ்சியவர் இவர்.

ஆபிரகாம் லிங்கன், மார்க் ட்வைன் இருவரும் அடக்குமுறையையும் அநீதியையும் வெறுத்தார்கள். இதனுல் இருவரும் தொழிலாளிகளையும் ஏழைகளையும் ஆதரிப்பவர்களாயினர். இருவரும் "வருவது வந்தே தீரும்" என்று நம்பினர். இதனுல்தான் மார்க் ட்வைன் "அமெரிக்க இலக்கியத்தின் லிங்கன்" என்று வில்லியம் டின் ஹாவல்ஸ் என்பவர் கூறியுள்ளார்.

★

---

7-ம் பக்கத் தொடர்ச்சி

புண்ணிலே புழுக்கள் நெளிந்தன. அவன் வேதனைப் புழுவாகத் துடித்தான்.

எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாற்றத்தால் ஏங்கித் தவித்துக் கொண்டிருந்த அவன், இந்தக் கடிதத்திற்குப்பின் ஒரு முடிவிற்கே வந்துவிட்டான்.

இன்று இரண்டிலொருமுடிவு; உண்டு–இல்லை! இதில் எது என்பதைத் தெரிந்துகொள்வதற்காக தூதராலயத்திற்குச் சென்ருன்.

சென்றவனுக்குக் கிடைத்தபதில் என்ன?–"இல்லை!"

"விசா மறுக்கப்பட்டுவிட்டது."

காரணமும் கூற மறுக்கப்பட்டு விட்டது.

அவர்கள் கேட்டவைகளையெல்லாம் கொடுத்தான். கேள்விகளுக்கெல்லாம் பதில் தந்தான். சந்தேகங்களுக்கெல்லாம் விளக்கம் கொடுத்தான் தெளிவாக. இருந்தும் அவனுக்கு அனுமதி மறுக்கப்பட்டு விட்டது.

இதற்கவன் என்ன செய்வான்?

எங்குபோய் அழுவான்?

தேற்றுவார் யார்?

ஆற்றுவார் எவர்?

எல்லாமே சூனியமாகிவிட்டது.

எல்லாமே முடிந்துவிட்டது.

எல்லாமே அழிந்துவிட்டது.

நடந்தகதை முடிந்துவிட்டது.

அவன் வாழ்வின்கதை முடிந்த கதையாகிவிட்டது.

இனி, அவன் யாருக்காக அழுவான்.

எவருக்காக அழுவான்?

ஏன் அழுவான்?

அவன் வாழ்வுப் பூங்கா வரண்ட பாலைவனமாகிவிட்டது.

அங்கு நீரோடைகள் இல்லை.

அதனுல் வாழ்வில் உயிர்த்துடிப்பும் இல்லை.

ஆமாம்! அவன் இதயத்திற்குள்ளேயே தன் இன்பக்கனவுகள்—இனிய கற்பனைகள் — ஆசாபாசங்கள் அனைத்தையும் தானே நெறித்துக்கொன்று புதைத்துவிட்டான். இனி அங்கே சோலை இராது. சுகந்த மணம் வீசாது. வசந்தம் இல்லை. வானம்பாடியின் இனிய கானமும் இல்லை.

ஆனுல், இதயக் கோயிலென்ற கல்லறையினுள்ளே புதைக்கப்பட்டுவிட்ட உண்மையான தெய்வமாகிய தன் தாய்க்காக அழுதுகொண்டிருக்கிருன்.

கண்ணீரிலேதான் உண்மை தெரிகிறது. கண்ணீரினுல்தான் உள்ளம் கிடைக்கிறது. ஆனுல்...

இனி என்ன கிடைத்துத்தான் என்ன பயன்?

எது தெரிந்துதான் ஆகவேண்டியதென்ன?

எல்லாமே முடிந்துவிட்டன.

இருப்பதற்கு எதுவுமே இல்லை.

சொந்தமும் இல்லை! பந்தமும் இல்லை! ஆம்! இனி எவருக்காக அழுவான்?

யாருக்காக வாழ்வான்?

கேள்வியும் ஒன்றே; பதிலும் ஒன்றே!

"யாருக்காக வாழ்வான்?"

★



# அரசப்பர் ஆணை

லிடியா

ஆலையூர் அரசப்பர், அரசுக்கு எப்போதும் நல்லபிள்ளையாக நடப்பவர். அரசு எள்ளுக்கு வரி போட எண்ணிக்கொண்டு இருக்கும் போதே, இவர் எண்ணெய் விலையை ஏற்றும் ஏழைப் பங்காளர். (ஏழைகளின் பங்கையும் ஆள்பவர்) அரசின் உதவியுடன் நடக்கும் பல தொழிற்சாலைகளைத் தனியார் துறையில் நிறுவி நடத்துகின்றவர். தோல், கடலை ஏற்றுமதித் தரகர், இன்னபிற. அரசை எப்போதும் அப்பிக் கொண்டே இருப்பார் என்றுதானோ என்னவோ, இவரது பெற்றோர் இவருக்கு 'அரசப்பர்' எனப் பெயரிட்டுள்ளனர்.

ஆலையூரில்தான் 'அரசப்பர்' தொழில் நிறுவனங்களின் தலைமை அலுவலகம் இருக்கின்றது. அரசப்பர் அன்று அலுவலகத்தில் தம் தனி அறையில் இருந்தார். அலுவலக வளைவுக்குள் சிற்றூர்தி ஒன்று நுழைந்தது. வெண்ணிறச் சிறு குல்லாயும் வெள்ளுடை உடுத்தவருமாய் ஒருவர் அதிலிருந்து இறங்கினார். அரசப்பரின் தனியறைக்குள் சென்றார். இருவரும் அரைமணி நேரம் தனித்துப் பேசினர். வந்தவர் சென்றுவிட்டார்.

O

அ. தொ. நி. தலைமை அலுவலகத்திலிருந்து எல்லாக் கிளை அலுவலகங்களின் மேலாளர்களுக்கும் அரசப்பரின் கையொப்பத்துடன் மறைவடக்கமான ஆணையொன்று அனுப்பப்பட்டது. விடுதலை இயக்கத்துடன் தொடர்பு கொண்டுள்ள ஊழியர்களையும், அதில் நேரடியாகவோ மறைமுகமாகவோ ஊக்கம் காட்டிவரும் ஊழியரையும் அலுவலகத்திலிருந்து நீக்கிவிடும்படி அவ்வாணை கூறிற்று. வலுக்கட்டாயமின்றி, கூடுமானவரை தாங்களாகவே விலகிச் செல்லும் நிலையை "எப்படியாவது" உண்டுபண்ணும்படி மேலாளர்களை அவ்வாணை கேட்டுக்கொண்டது.

O

சோலையூர் அ. தொ. நி. கிளை அலுவலக மேலாளர் தன் அலுவலக அறையில் ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார். அரசப்பரின் அஞ்சல் பிரித்தபடி இருந்தது. விசிறியின் சுழற்சியால் எழுந்த மென்காற்றில், அரசப்பரின் ஆணையின் ஒரு மூலை படபடவென்று அடித்துக் கொண்டது. மேலாளர் மேகவர்ணம் மணியை அழுத்தினார்........'தாங்களாகவே விலகிச் செல்லும் நிலையை "எப்படியாவது" உண்டுபண்ணும்படி......' என்ற வரிகள் அவரை உறுத்தின. யாரை முதலில் நெருக்குவது? என்று எண்ணிக்கொண்டிருந்தார். பணியாள் உள்ளே வந்தான். ஒன்றுமில்லை! நீ போகலாம்! என்றார். பணியாள் வெளியில் சென்றுவிட்டான். விடுதலை இயக்கத்தின் விறுவிறுப்பு நாட்டு மக்களின் உள்ளத்தில் எவ்வாறு இடம் பெற்றுள்ளது என்பதையும், தன் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களில் எத்தனை பேர் அவ்வியக்கத்தில் பற்றும் பரிவும் கொண்டவர்கள் என்பதும் மேலாளருக்கு நன்கு தெரியும். அவரைப் பொறுத்தவரை தன் எசமானரைத் தவிர வேறு எதிலுமே பற்றில்லாதவர். இயக்கப் பற்றுள்ள ஒவ்வொரு ஊழியரையும் மனத்திரையில் கொண்டுவந்தார். இதுவரை அவர்களில் ஒருவருக்கும் இவர் இடைஞ்சல் செய்ததில்லை. இப்பொழுதும் இடைஞ்சல் செய்ய எண்ணமில்லை. ஆனால், அரசப்பரின் ஆணை ஆடிக்கொண்டிருந்தது. அஞ்சல்கள் பதிந்தனுப்பும் எழுத்தன் 'செங்கதிர்' இயக்கப்பற்றுள்ளவன். விடுதலை இயக்கத்தில் முழு நம்பிக்கையுடன் இருப்பவன் செங்கதிர். மேலாளரின் எண்ணத்தில், செங்கதிர் ஒரு நல்ல கடவுளன்பன். ஏனென்றால் முதன் முதலாக இவ்வலுவலகத்தில் வேலைதேடிக்கையில் விண்ணப்பத்துடன் வந்த செங்கதிரை மேலாளர் தேர்ந்தெடுக்கும்பொழுது தெய்வ நம்பிக்கை பற்றி அவனைக் கேட்டதற்கு, தன் கையிலுள்ள வேலை விண்ணப்பம்கூடக் கடவுள் தனது கனவில் சொன்னபடி எழுதியதுதான்' என்று கூறினவன் செங்கதிர். கடவுளிடம் உள்ள பற்றினைப் போலவே, நாட்டிடமும் பற்றுக் கொண்டவன் என்று எண்ணினார் மேலாளர். அவனையே முதலில் கலக்க முடிவு செய்தார். மேகவர்ணத்தின் 'அலுவலர் நீக்கும் படலத்தில்' முதலில் தோன்றிய பாத்திரம் செங்கதிர். அவர் விரல் மணியை அழுத்தியது. பணியாள் வந்தான். 'டெஸ்பாட்சர்' செங்கதிரை வரச்சொல்!' என்றார்.

O

"ஓ......செங்கதிர்! உட்கார்!"

அவன் தயங்கினான். அவன் சாமானியன்; அஞ்சல் பதிந்தனுப்பும் எளியன். அலுவலக மேலாளர் அவர். ஆக்குவார்; அழிப்பார். அவர் எல்லாம். அவன் தயங்காமல் என்ன செய்வான், அதுவும் அவரது அறையில்.

"பரவாயில்லை! உட்கார்!" மீண்டும் சொன்னார் அவர். தெளிவாகவும் உறுதியாகவும் கட்டளையிட்டதுபோலிருந்தது அவர் குரல். செங்கதிருக்கு உட்கார்வதே சரியெனப்பட்டது; என்றாலும் சற்றுக் கூச்சமும் அச்சமும் இருந்தது.

"செங்கதிர்! உன்னை நான் குற்றம் சாட்டுவதாக நீ எண்ணவேண்டாம். நானும் அப்படிச் செய்ய விரும்பவில்லை. ஆனால், அடிக்கடி உன் வேலை அரைகுறையாகவே நின்று விடுகிறது. கடிதங்கள் எல்லாம் எழுதப்பட்ட அன்றே அனுப்பப்படுவதில்லை என அறிகிறேன்..."

"ஐயா! நான் மிகவும் கடுமையாகத்தான் உழைக்கிறேன்."

"ஆம்! நீ உழைப்பது எனக்குத் தெரியும். சீக்கிரமே இங்கு வருகிறாய்; பகல் உணவு வேளையில்கூட வேலை செய்கிறாய்; சில நாட்களில் இரவு ஒன்பது மணிவரையிலும் நீ வேலை செய்வதை அறிகிறேன்; வருத்தப்பட்டு உழைக்கிறாய்; இருந்தும் உன் பணியை நீ முடிப்பதாகத் தெரியவில்லை. ஏதோ ஒரு குறை உன்னிடம் இருக்கிறது. ஒரு வேளை உனக்கே அது தெரியலாம்."

"ஆம் ஐயா! அது என்னவென்று நான் அறிவேன்!"

"அப்படியானால் நீ என்னிடம் சொல்லலாம். என்னால் முடிந்த எந்த உதவியையும் நான் செய்வேன்."

"அதாவது ......அதாவது ......" என்று செங்கதிர் சொற்களை விழுங்கினான். சற்றுக் குழப்பத்துடன் நாற்காலியில் சாய்ந்து உட்கார்ந்தான். தன்னைக் கலக்கிக்கொண்டிருந்த கவலையை உதறித் தள்ளுபவன் போல் குலுங்கி உட்கார்ந்தான். "அதாவது அது என்னுடைய தலைவிதிதான் ஐயா!" என்று சற்று உரத்த குரலில் கூறினான்.

மேலாளர் திணறினார். அவர் முதல் முயற்சி தோல்விப் பள்ளத்தில் இறக்கியது அவரை. ஆனாலும் அவர் பணியை அவர் செய்தாக வேண்டுமே! அரசப்பரிடம் நற்பெயர் பெற வேண்டுமே! செங்கதிரைப் போன்றவர்களிடத்தில்சற்றுப்பொறுமையுடன் நடந்துகொள்ளவேண்டும் என்பதை உணர்ந்தார்.

"நீ கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது செங்கதிர். நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதை எல்லோரும் ஒப்பமாட்டார்களே! கடிதங்கள் எல்லாம் எழுதப்பட்ட அன்றே அனுப்பப்படுவதில்லையே, ஏன்? என்று தலைமை அலுவலகத்திலிருந்து எனக்கு விளக்கம் கேட்டு எழுதினால், 'சோலையூர் கிளை அலுவலகத்தின் தலைவிதிதான் காரணம்' என்று நான் விளக்க முடியுமா? விளக்கித் தப்பிக்க முடியுமா? அவர்கள் அதைப் புரிந்துகொள்வார்களா? ஒப்புவார்களா? அதிலும் இப்பொழுதுள்ள தலைமை அலுவலகப் பொதுத்தலைவர் அவ்வளவு உயர்ந்தவர் என்று கூற முடியாது! என்ன செங்கதிர்?"

"ஐயா, அப்படிச் சொல்லாதீர்கள்! எல்லா மனிதர்களும் உயர்ந்தவரே; சிறந்தவரே!" சட்டென்று கூறினான் செங்கதிர்.

"அது சரி! உண்மைதான். ஆனால் மிகஉயர்ந்தவரும்கூடச் சில வேளைகளில் மிகத் தாழ்வான—கசப்பான—காரியங்களைச் செய்யவேண்டியவர்களாகி விடுகின்றார்கள், அல்லவா! தங்களுடைய இயற்கைத் தன்மைக்கும் மீறி நடக்க வேண்டி வருகின்றது. நமது கிளை அலுவலகம் முறைப்படி இயங்கவில்லை என்று இதை மூடிவிடவும் அவர் எண்ணலாம். உன்னால் நாற்பது பேர் பணி இழக்க வேண்டுமா? மற்றவர்கள் எங்கு போய் வேலை தேடுவார்கள்?" மேலாளர் மேகவர்ணம் செங்கதிரைக் கூர்மையாய்ப் பார்த்தார். தன் சொற்கள் வேலை செய்வதை உணர்ந்தார். மீண்டும் பேசினார். "என்னையே எடுத்துக்கொள்! வரும் சனவரித் திங்களில் எனக்கு அறுபது வயது ஆகும்; எனக்கு யார் வேறு வேலை கொடுப்பார்கள்?"

"உங்களை எவரும் வேலைக்குச் சேர்த்துக்கொள்வார்கள்! நீங்கள் நல்லவர்; வல்லவர்!" உடனே சொன்னான் செங்கதிர். போட்டி போட்டுக்கொண்டு அவரை வேலையில் அமர்த்திக் கொள்வார்கள் என்கிற நம்பிக்கை அவன் குரலில் இருந்தது.

"நடக்காது! நான் அப்படி நினைக்கவில்லை!" சற்றுச் சோர்வுடன் கூறினார் மேகவர்ணம்.

"நீங்கள் எண்ணுவது தவறு! நான் உங்களுக்கு உதவுவேன். வேலை நிச்சயம் வாங்கித் தருவேன்! எவ்வகையிலும் என்னால் முடியும்! நான் செய்வேன்!" பெரும் ஒத்துணர்வுடனும் இரக்கத்துடனும்அத்துடன் படபடப்புடனும் கூறி முடித்தான் செங்கதிர்.

இருவரும் சற்று நேரம் பேசவில்லை. செங்கதிருக்குப் படபடப்பு இன்னும் அடங்கவில்லை. மிக அவசரப்பட்டுப் பேசிவிட்டதை உணர்ந்தான். அவன் யார் ஒரு மேலாளருக்கு உதவ? என்ன வேடிக்கை! என்ன கோமாளித் தனம்! எல்லாம் அறிந்த வயது நிறைந்த மேலாளர் முன் அவனது ஏழ்மைப் பேச்சை வரம்புமீறிச் சொல்லிவிட்டானே! மேலாளருக்கு மட்டுமல்ல; சோலையூர் கிளை அலுவலக ஊழியர் எல்லோருக்குமே உதவுவதாக அவன் எண்ணம்.

"நீங்கள் சரி என்று உத்தரவு கொடுத்தால், இவ்வாரமே செல்கிறேன் "ஐயா! நம் கிளை அலுவலகத்தின் நன்மைக்காகச் செல்கிறேன்."

அவனுடைய துணிவையும் ஆர்வத்தையும் நன்றாய்க் கண்டார் தலைவர். "சரி! மிகவும் நல்லது! உன்னுடன் உள்ள ஊழியர்களின் நல்வாழ்வில் நீ அக்கறை காட்டுவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன்!"

"ஆம் ஐயா! நிச்சயமாகச் செல்கிறேன். ஏழுமலையானிடமே நேராய்ச் செல்கிறேன். அவனிடம் எல்லாவற்றையும் கூறுகிறேன். நமது 'சோலையூர்—கிளை அலுவலகம் மூடப்படவேண்டாம்' என்று ஆண்டவனிடம் வேண்டிக்கொள்கிறேன். நமக்கு அவர் உதவுவார் என்று நான் நிச்சயமாய் நம்புகிறேன்."

"செங்கதிர்!" மேலாளர் மேகவர்ணம் கோபத்தால் குமுறினார். ஆனாலும் அடக்கிக்கொண்டார். செங்கதிரைப் போன்றவர்களிடம் இப்படி நடப்பது பயன் தராது என்று எண்ணினார். மிகவும் பொறுமை வேண்டும். அவனுடைய போக்கு எப்படியோ, அதன்படியே தான், அவன் நிலையிலே, அவன் வழியாகவே அவனை மடக்கவேண்டும் என்று உணர்ந்தார்.

O

'செங்கதிர் உறுதியான உள்ளம் கொண்டவன்; கடவுள் நம்பிக்கை உள்ளவன்; விடுதலை இயக்க வீரன்;' என்பதையெல்லாம் மறுமுறையும் மனக்கண்ணால் கண்டார் மேகவர்ணம். ஆம்! அவர் ஒரு புதுவழி கண்டார்; புன்னகை கொண்டார். செங்கதிர் இவ்வழியில் வீழ்வான்; விலகல் தாள் நொடியில் எழுதித் தருவான். இம்முறை நிச்சயம்

தலைவருக்கு வெற்றி. தன்க்குள்ளே மகிழ்ந்துகொண்டார். அழைப்பு விடுத்தார் செங்கதிருக்கு.

"நேற்று இரவு என் கனவில் கடவுள் வந்தார் செங்கதிர்! நீ அதைப்பற்றிக் கேட்க விரும்புவாய் என்று எண்ணுகிறேன்!''

அவன் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்தான். கடவுளைக் கண்ட அந்தப் பெரியவரின் அடிகளில் விழுந்து வணங்கவேண்டும் போலிருந்தது அவனுக்கு. தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொண்டான்.

"உட்கார்! செங்கதிர்! உட்கார்! நான் சொல்வதைக் கேள். கடவுள் என் கனவில் வந்தார். உன்னைப் பற்றி என்னிடம் பேசினார்!''

"என்னைப்பற்றி...... என்னைப் பற்றியா ஐயா? ஆ! எவ்வளவு பெருமையான நிகழ்ச்சி.'' அவன் உளமிக மகிழ்ந்தான்.

மேலாளர் மேலே தொடர்ந்தார். "ஆம்! உனக்கும்எனக்கும் பெருமை தரும் நிகழ்ச்சிதான். சரி! நாம் காரியத்துக்கு வருவோம்! நீ உன் வேலையிலிருந்து விரைவில் விலகிக் கொண்டால் நல்லது என்று உன்னிடம் சொல்லும்படி கடவுள் என்னிடம் கூறினர். உன் வழியில் நான் தடைக்கல்லாக இருக்கவேண்டாம் என்றும் எனக்கு அவர் அறிவுறுத்தினர்.''

"கடவுள் அப்படிச் சொன்னரா ஐயா?''

"ஆமாம் செங்கதிர்! அவர் தமிழிலேயே பேசினர். உன்னை அலுவலகத்திலிருந்து விலகும்படி அவர் பணித்தது முதலில் எனக்கே வியப்பாக இருந்தது. ஒரு வேளை நான் தான் சரியாய்க் கேட்கவில்லையோ என்றுகூட நான் ஐயப்பட்டேன்...''

"கடவுளே பேசும்பொழுது நீங்கள் உற்றுக் கேட்காமலிருந்திருப்பீர்களா?'' செங்கதிரின் பேச்சில் கேலிக்குறிப்பு இருந்தது.

"அவர் என்ன சொன்னர் என்பதை நான் விளங்கிக்கொள்ளாமலில்லை. என்னை அவர் தெரிந்தெடுத்து என்னிடம் வந்து உன்னைப்பற்றிக் கூறியதில்கூட எனக்கு ஐயமில்லை. அது உண்மை. "நாளையே செங்கதிர் விலக விரும்பினல், அவன் நாளையே விலகுவானக'' என்று இதே சொற்கள் என் காதுகளில் தெளிவாகக் கேட்டன. நான் உன்னை என் இளைய தம்பிபோல் நேசிக்கிறேன் என்பதை அவர் நன்கு அறிவார்.''

"நான் விலகிச்செல்லவேண்டுமென்று கடவுளே விரும்புகிருரா?''

"ஆம்! எனக்கு வருத்தம்தான். ஆனல் அவர் சித்தம் அதுவானல் .........!''

செங்கதிர் மீண்டும் எழுந்து நின்ருன். "ஐயா! நான் செல்கிறேன்; விலகல் தாள் தருகிறேன்!'' என்று சொல்லி கதவுவரை சென்று மீண்டும் மேசை யருகில் வந்தான். "ஐயா! நீங்கள் நல்லவர்; மிகவும் நல்லவர்; பல நலமும் பெற்றுப் பல்லாண்டு வாழுங்கள்'' என்று சொல்லிவிட்டு விர்ரென வெளியேறினன்.

மேலாளர் மேகவர்ணத்துக்கு இது எதிர்பாராத வெற்றி; மாபெரும் வெற்றி. அவரும் அப்படித்தான் எண்ணினர். பதினைந்து நாட்கள் சென்றன. செங்கதிர் இன்னும் விலகல்—தாள் தரவில்லை. அப்படிச் செய்யும் அறிகுறி கூடத் தென்படவில்லை. முன்னைவிடக் கடுமையாகவும் நேர்மையுடனும் உழைத்தான். மேலாளரும் அவசரப்பட விரும்பவில்லை. ஆனலும் அரசப்பரின் அஞ்சல் அவரை உறுத்திக்கொண்டிருந்தது. ஏதாவது செய்தாக வேண்டும். அவர் மனம் அமைதி காணவில்லை. செங்கதிருக்கு அழைப்பு விடுத்தார்,

"ஐயா!''

"உட்கார்! உன் விலகல் குறித்து மீண்டும் உன்னுடன் பேச விரும்புகிறேன்!''

"கடவுள் மறுபடியும் உங்களை நினைவு படுத்தினரா?''

"இல்லை!'' உண்மை சொன்னர் மேலாளர்.

"ஐயா! நான் விலகிக்கொள்ள முடிவு செய்துவிட்டேன். ஆனல் அதில் ஒரு சிறு இடைஞ்சல் இருக்கிறது! கடவுள் என் கனவில் தோன்றி என்னிடம் கூறவில்லையே என்பதுதான்! நீங்கள் கொடுத்து வைத்தவர்; சிறந்தவர்; சீரியர். ஆனல் நான் அவரைக் காணவில்லையே தவிர, அவர் பேச்சைக் கேட்டிருக்கிறேன். நான் எழுத வேண்டிய சிலவற்றை எழுதிக் கொள்ளும்படி அவர் என்னிடம் பேசியுள்ளார்.''

"என்ன? கடவுள் பேசினரா? உன்னை எழுதிக்கொள்ளச் சொன்னரா? நீ என்ன உளறுகிருய்?''

"ஆம் ஐயா! அதுதான் நான் முன்பே சொல்லியுள்ளேனே! இந்த அலுவலகத்தில் நான் கொண்டு வந்து கொடுத்த விண்ணப்பம்வேலை அவர் சொல்லி நான் எழுதியது என்று. அவர் என் கண்களுக்கு மறைந்துகொண்டு என் காதுகளில் நன்ருய் விழும்படி 'டிக்டேட்' செய்தார்! நீங்கள் உத்தமர்! உங்கள் கண்ணில் அவர் பட்டுள்ளார்...... ஐயா! ஒரு ஐயம்! கனவில் அவர் தோன்றியபோது வெள்ளுடை அணிந்திருந்தாரா? இல்லை; தோலுடையுடன் தோன்றினரா? இல்லை; உங்களைப்போல மேனட்டு முறையில் நீண்ட காலுறை, மேல்சட்டை, தொப்பி, காலணி இவற்றுடன் காட்சியளித்தாரா? இல்லை; காந்தியார்போல், வீனேபாபோல், ஏழைக் கோலம் எடுத்து நின்ருரா? இல்லை..''

"செங்கதிர்! வாயைமூடு!'' மேலாளர் முகம் சினந்தது. "உனக்கு நன்மை செய்யவே நான் விரும்புகிறேன். அவ்வளவுதான்! நாமெல்லாம் கடவுளின் கைப்பாவைகள். உன் பிரச்சினை எனக்கு விளங்குகிறது. உன் வேலை மனுவை எழுதுவதற்குச் சொல்லிக்கொடுத்த கடவுள் உன் விலகல் மனுவையும் எழுதச் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்று நீ விரும்புகிருய்! ஆனல் இப்பரந்த உலகில் அவருக்கு எவ்வளவோ பணியுண்டு. உன் சொந்த நன்மை தீமைகளில் உன் கடிதங்களை எழுதச் சொல்வதற்கு அவருக்கு நேரமேது?''

"இரண்டு நிமிட நேரம் போதும் ஐயா! அவருடைய பணியை நானும் அறிவேன். நான் ஒரு 'டெஸ்பாட்ச்' கிளார்க். எனக்குச் சுருக்கெழுத்துத் தெரியும்!''

தலைவர் சீறினர். "அப்படியானல் நீ இப்பொழுது விலக முடியாது என்கிருயா?''

"கடவுளின் துணைக்காகக் காத்திருப்பது நல்லது என்றுதான் கூறுகிறேன்.''

"சரி! நான் உனக்குத் துணை செய்கிறேன்! நான் சொல்கிறேன்; நீ எழுது!''

"அது எப்படி ஐயா முறையாகும்? கடவுளின் வேலையை நீங்கள் எப்படிச் செய்யமுடியும்? இந்த வேலையை நீங்கள் செய்வது......''

"செங்கதிர்! நீ போகலாம்! பிறகு கவனித்துக் கொள்கிறேன்!'' மேலாளருக்கு மீசையில்லை என்ருலும் மேலுதடு துடித்தது.

உறுதியான உள்ளத்தைத் தாங்கிய செங்கதிர் வெளியேறிச் செல்வதை இமைக்காமல் பார்த்தார் மேலாளர்.

# போர் வாடை!

**ந. இறைவன் பி. ஏ.**

மொட்டவிழ் தாமரைகள் முறுவல் பூத்துக், கட்டழகு பாவை தனைப் பார்ப்பதற்குக்காத்திருக்கும். சிட்டினங்கள் பூங்கொம்பில் ஊஞ்சல் ஆடிச் சிற்றிடையாள் வருகைக்குக் காத்திருக்கும். வட்டநிலா முகத்தினிலே சிரிப்பைத் தேக்கி வண்டாடும் மலர்விழியாள் வந்தவுடன் தொட்டணைத்து இலக்கியத்தில் புதுமை சேர்க்கத் துடிதுடித்து அவனுமங்கு காத்திருந்தான்.

கன்னலெனச் சொல்லாடும் கனிவாய் பெண்ணழகி அன்ன நடை பயிலுவதைக் காண்பதற்கும்; மின்னலென நொடிக்கு நொடி தோன்றி மறையும் மெல்லியலாள் சின்ன இடை காப்பதற்கும், அவன் இளந்தென்றல் வீசுகின்ற பூஞ்சோலையில் காத்திருந்தான். அவ்ள் அங்கு வரவில்லை. எழிலில்லை சோலையில். எழில்காணு நிலையால் எரி வீழ்ந்த மலரானுன். இளங்கனி அவள் ஏனே இளநகையால் காப்பதற்கு எழில்பாடும் சோலைக்கு வரவேயில்லை!

காரிருள் கலையும் நேரம். கவிஞர்கள் புனைந்தெழுதும் பாரிருள் அகற்றவரும் பகலவன் தோன்றும் நேரம், எழுந்த புகையென எங்கெங்கும் பனியரந்து நின்றநேரம். பனியிலும் பாவையர்கள் நீர் மொண்டு செல்ல அணி அணியாய்க் குடத்தோடு நடக்கின்ற காட்சி, காண்பவர் உள்ளத்தில் களிப்பூட்டும் கோலம். கனிபோலும் மென்னிதழில் பனிபோலும் அமிழ்துறங்கும்; அவன் உள்ளத்துள் வாழும் பாவையும் குடமேந்தி நடைபயின்று வந்தாள்.

எழில்தவழ் முகமலரில் இளநகை பூத்துச் சிந்த; நடையிலே கலை வளர்த்து நளினத்தை உடன் இழைத்து மான்விழி கவிகள்பாட, மானென மருண்டுநோக்கி மைபடர் வேல்விழியாள் மையலை உதிர்த்து வந்தாள். அவன் அருகில் வந்ததும் நின்ருள்.

சொல்லேண்டி தோழி என்று தோழியிடம் அவள் குழைய, மாலை வரும் நேரம் சோலை வருவோம் என்று சொல்லவா தலைவி என்று அவள் கேட்க, சொன்னதுபோதும், நட நீ என்று தோழியைப் பின்னிருந்து தள்ளிக்கொண்டு அவள் நடந்தாள். கொஞ்சத்தூரம் சென்றதும் அவனைப் பார்த்துவிட்டுச் சிரிப்பொன்றையும் அவனுக்காகச் சிந்திவிட்டு மெள்ள நடந்தாள். அவள் இதழில் பூத்துச் சிந்திய அந்தச் சிரிப்பு அவன் இதயத்தில் எப்படிக் குடிபுகுந்ததோ தெரியவில்லை. அவள் இதழ் சிரிப்பு அவன் இதயத்துச் சிரிப்பானது. அவன் தன் இதயத்துச் சிரிப்பைத் தழுவிக் கொண்டே இல்லத்தை நோக்கி நடைபயின்ருன்.

அவன் சோலை வந்ததும் மாலையும் அங்கு வந்தது. காலைமுதல் அவன் இதயத்தில் அரும்பி அரும்பி மலர்ந்து மலர்ந்து உதிர்ந்த எண்ணமெனும் மலர்கள் எண்ணிக்கை கடந்த ஒன்று மங்கை வருகையை எங்கெங்கும் தேடிக்களைத்தான். வானம் பொழிய ஆரம்பித்தது. சொட்டுச் சொட்டென்று மழை ஒலிகேட்கும். அது மொட்டுமொட்டு என்று அவளை நினைவூட்டுவதாக அவன் எண்ணிக்கொண்டு எங்கே மொட்டு! எங்கே மொட்டு! என்று தேடிக் களைத்துச் செடி ஒன்றின் அடிபோய் அமர்ந்தான். ஆலைவாய்க் கரும்பென மாலைவாய்ப்பட்டு அவன் துடியாத் துடித்தான்.

கொட்டுகின்ற மழையிலும் அந்தத் தலைவி தோழியின் துணையுடன் செயல்நாடும் காளையின் உளம் நாடி வந்தாள். வந்தவுடன் சேர்ந்த முடன் வந்து, அவன் இப்படி இப்படி நம்மைத் தழுவிக்கொள்வான், அப்பொழுது நாம் இப்படி இப்படி நழுவி நழுவி ஓடவேண்டும் என்று தன்னுடைய மனதிடத்துச் சொல்லிக் கற்பனைத் தேரேறிக் காவிற்கு வந்தாள். காவினில் வந்து காதல் தேன் பொழிபவனைக் காணுமல் தவித்தாள். தன் தோழியைப் பார்த்து "சேடி, வாடி! அவனைத் தேடிப் போடி! பாடி, ஓடி! கூடி, யாடி! பின் அவனேடு ஊடி, நாடி! பேரின்பம் பெறவேண்டும் என்று வந்தேன், அவனில்லை என்ருல் இன்று என்னுலே வீடுதிரும்ப முடியாது. எப்படியும் அவனைக் கண்டாகவேண்டும். அவன் காதல் தேன்பேச்சை மொண்டு குடித்தாகவேண்டும் என்று தோழியிடத்துச் சொல்ல, தோழி ஒருபக்கம் தேடிப்போக, தான் மறுபக்கம் அவனைத் தேடிப் போனுள்.

இத்தனையும் கண்ணுற்றுக் களித்திருந்தான் கள்வன். செடியடியில் இருப்பவனைக் கண்டுவிட்ட கோதை ......இரு இரு எம்மை ஏமாற்றிய உன்னை விடுவேனு நான் என்று மனதுக்குள் சொல்லிக்கொண்டு திடுமெனப் பாய்ந்து அவன் அமர்ந்திருந்த செடியினை ஆட்டினுள். செடியினில் தேங்கி இருந்தநீர்த்துளிகள் எல்லாம் அவன் தலையில்

தெளிக்க; செடிவிட்டு எழுந்தோடி வந்து கொடியவளை அள்ளி அணைத்து மகிழ்வோடு நடந்தான். அவளை எப்படி எப்படியோ கண்டு களித்திருக்கிருன் அவன். ஆனுலும் மழையிலே நனைந்ததால் அவள் உடலில் ஆடை ஒட்ட அரும்பி இருந்த புது அழகை அவன் இது வரை கண்டதில்லை. ஆடைக்கும் ஒருகால் அவள்மீது ஆசையிருக்குமோ என்ற ஐயம் எழவே...ஒட்டியிருந்த ஆடையை மெள்ள எடுத்தான். ஆனுல் அவள் அவனைப் பார்க்கவும் நாணிக் கண்களை மூடிய வாறு ஏனிந்த...என்று வார்த்தைகளை முடிக்காமல் விழுங்கினுள். என்னைவிட உனக்கு ஆடைமேல் ஆசை அதிகமோ என்று அவன் அவளிடத்துக் குழந்தைபோல் குழைந்துகேட்ட கேள்வி......நான் ஆடையாகப் பிறந்திருக்கவேண்டும் என்று சொல்வது போலவும்; என் ஆசையெல்லாம் மழையாகி உன் மீது பொழியவேண்டும் என்பது போலவும்.........அப்பொழுது நான் உன்னுடலில்......என்று அவன் சொல்லத் துடிப்பது போலவும் அவளுக்கு அவன் காட்சியளித்தான்.

இத்தனை நேரம் அமைதியாகக் கழிந்ததே என்று வருந்துபவன் போலத் திடீரென "ஏனித்தனை நேரம் என்று அவன் அவளைக் கேட்க! இருளின் துணை வேண்டாவோ என்று அவள் அவனைக் கேட்க! நின் அருளின் துணையிருக்கும்போது நமக்கு இருளின் துணை யெதற்கு என்று அவன் அவளைக் கேட்க! அவனுடைய கேள்விக்கு எதிர் கேள்வி கேட்க இயலாதவளாக அவள் தவித்தாள். குளிரில் அவள் உடல் நடுங்கிற்று வானமே! வான் உமிழும் மழையே! மழை உமிழும் குளிரே! எங்களை யாரென்று எண்ணி நீ தாக்குகிருய்! பெண்ணிவள் என் செய்வாள் என்று இறுமாந்தோ தண்ணெனும் குளிரால் தாக்குகிருய் இவளை. குளிரே உன்னை நான் கொல்வேன்! நீ என் சூளுரையை ஏற்பாய்! எனப் புகன்று சூடேற்றும் செயல் செய்தான்.

நெடு நேரம் ஆயிற்று! தோழியும் வரவில்லை. தேன் நிலவும் கீழ் வானில் தோன்றி இரவைப் பகல் செய்தது. ஓடி விளையாடி இன்பம் கூட்ட நினைத்தாள். மானென ஓடினுள். தேனெனப் பாடி மானினைத் தொடர்ந்தான்,

பூத்துச் சிரிக்கும் புதுமலரே—நீ
பூவாமல் சிரிக்கும் வான் நிலவோ?
பூத்துக் கனிந்த மாங்கனியோ—நீ
பூவாமல் கனிந்த தேன் கூடோ?
உண்டால் சுவைக்கும் கனிவகையோ
—நீ
உண்ணுமல் சுவைக்கும் நினைவலையோ?
எழுதி வைத்த இலக்கியமோ—நீ
எழுதாமல் பாடும் குயிலிசையோ?

மானென ஓடித் திரிந்தவளைத்தேனெனப் பாடி மயங்க வைத்தான். மயங்கியவளை மடியில் கிடத்தி அமைதியாக மகிழ்ந்துகொண்டிருந்தான். சுவையைத் தந்தவளுக்கு இசையையாவது தருவோமென்று எண்ணி மீண்டும் அவள் செவிகளில் இன்பத்தேன் பொழிந்தான்.

காய்கனிந்தால் அதைக் கனிகளென்
பேன்
கன்னிநீ கனிந்தால் அதைக் காதல்
என்பேன்!
நாளை முதிர்ந்துவிடும் மொட்டுகளை
முறுவலென்பேன்
என்றும் முதிராத இளநகையை என்ன
என்பேன்!
மலர் ஊறும் நீரினைத் தேன் என்பேன்
மங்கை உன் இதழூறும் நீரினை என்ன
என்பேன்.
நீராடும் மீனினைக் கெண்டை என்பேன்!
நின்முகமாடும் விழியினை என்ன
என்பேன்!
குறையான நிலவினைப் பிறை என்பேன்
குறைகாணு நின்நுதலை என்ன என்பேன்
வேலியில் பழுக்கும்கனி கோவைக்கனி
வேல்விழியே நின்வாயின் இதழிரண்
டும் என்ன கனி! என்ன...கனி!

என்ன கனி! என்ன கனி என்றந்த இதழ் கனியைச் சுவைத்துக்கொண்டிருந்தான்.

அங்கு கொள்ளை போய்க்கொண்டிருந்த இன்பத்திற்கு எல்லை இது தான் என்பதுபோல் போர் முரசு ஆர்த்தது. புகழ் முரசு கொட்டிய தமிழ் மண்ணில் போர் முரசு கொட்டச் செய்தவன் யாரென்ற கேள்வியோடு எழுந்தான்.

"வடபுலத்து வேந்தன் ஒருவன் இரவோடு இரவாக வந்து எல்லையில் வாழ்வோரை தொல்லைகள் பல செய்து துயர் கொள்ளச் செய்கிருனும். தென் புலத்தில் அடி வைத்த பகைவன் எவனும் தன் புலத்திற்கு உயிரோடு சென்றதாக வரலாறு இல்லை. புதுமையான வரலாற்றை உருவாக்க எண்ணுகின்ற வடபுலத்தான் தன் புதை குழியை இம்மண்ணில் உருவாக்கிக் காட்டுவோம்! என்று அன்னை மண்மீது ஆணையிடுவீர்! அன்னை மண்மீது ஆணையிடுவீர்!! என்று முரசறைவோன் பறை சாற்றுகிருன்.

துயில் கொள்ளும் நேரத்தில் துயர் கொள்ளும் வினை செய்த கோழையா நம் பகைவன்! யாரந்தக் கயவன் என்றுரைத்து வீரர்கள் பறந்தனர்.

தென்வேந்தர் குதிரைப்படைக் குளம்பொலி கேட்டே குலைநடுங்க ஓடும் வடபுலத்தானு நம்மோடு மோத வந்தான் என்று எள்ளி நகைசெய்தான்.

இடியெனத் தாக்கி! மாற்ருர் கொடிமரம் சாய்க்கும் படைவலி கொண்ட நகைக்கிடம் செய்தவன் யார்! போரென்று சொல்லிக் களமமைத்து வெல்லத் துணிவில்லாக் கோழை! இருட்டினிலே வந்து இடர் செய்து ஓடும் கயவன்! யாரென்று எண்ணிப் பகைசெய்தான் தென்னவரை என்று சூளுரைத்து, தோள் கொட்டி; புகழென்னைத் தேடி வந்ததென்று பூரித்தான்.

களமா எனக் கேட்டாள் கன்னி, களமின்றி இங்கிருக்க நானென்ன பிணமா எனக் கேட்டான் காளை.

காதல் மணம் புரிந்தோரும். மணம் புரிந்து மகப்பேறு இல்லாரும் களம் செல்லத் தேவையில்லை எனும் விதியை அறியீரோ எனக் கேட்டாள்.

உயிர்மேல் வேட்கையுள்ள ஒருவனுக்குத் தந்த விதிவிலக்கை நான் எனக்கென்று கொண்டு இம்மண்ணில் வாழவா? அப்படி வாழ்கின்ற வாழ்வும் ஒரு வாழ்வா? பெற்றெடுத்து என்னைப் பெயரிட்டு வளர்த்த அன்னைக்கும் அன்னை, அருந்தமிழ்! அம்மண்ணில் அயல் ஒருவன் கால்வைத்துப் போரென்று முழங்கிய பின்பும் வாளெடுத்துத் தோள் தட்டி வா பகையே என்றழைத்து வாளுக்கு இரையாக்கி வையத்தில் நிலவாக, கதிராக வாழாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? வெற்றி வெற்றி என்று களம்கண்ட வெற்றியை விண் முட்டும் ஒலியெடுத்து முழக்குதற்கு அன்றி! போற்றி போற்றி என்று பகைவனுக்கு வாழ்த்துரைக்குமா என் வாய்.

களம் என்று சொன்னபோதும் கலவியில் திளைத்திருந்தான் என்று நாடு தூற்றும் கொடியவனுகவா என்னை வாழச் சொல்கிருய்!

என்னுடைய நண்பரெல்லாம் தன்னுடைய மகனுக்கு தன் நெஞ்சிருக்கும் வடுகாட்டி, நாடு காக்க நான் பெற்ற வடு என்று சொல்லித், தான் பெற்ற செல்வத்தை மார்போடுஅணைத்து, மகிழ்கின்றபோது, நான் மட்டும் நாணித் தலைகுனிய வேண்டுமே இன்று களம் போகா விட்டால்! கோவைக் கனியிதழ் நழுவும் கோதையர் மொழியேயாயினும்! மலர்பூண் யாழ்வழி நழுவும் இசையேயாயினும்! தேன் கூட்டினில் நழுவும் தீந்தேன் மொழியே யாயினும்...... போர் தொடுத்து வந்தவன் புறம்கொடுத்து ஓடும்வரை நில்லேன்! நின்று சுவையேன் என்றார்த்துப் புறப்பட்டான்.

காதல் களையிழந்த காவாட! சீர் மேவும் கார்வாட! காவுலவும் கார் முகில் வாட! காதல் மொழிகேட்டுக் காவுறையும் கிளி வாட! காதல் இசைகேட்டு இருந்த குயில் வாட! கொடி வாட! கொடி சிரிக்கும் பூ வாட! கோதயவள் முகம் வாட! அவள் நறுமலர் குழல் வாட! குழலிருக்கும் பூ வாட! நீராடும் மீனினைப் போல் கோதையவள் காதளவு நீண்டாடும் விழியிரண்டும் வாட! அவளைக் காவினிலே விட்டுவிட்டுப், புகழ் வாடை நாடி போர்வாடை வீசிய புலம்தேடிப் போயினான்.

விடுவில்லை என்ற சொல்லும்! எடு வேலை என்ற சொல்லும்! தொடுவானைத் தொட்டு மீண்டும் நெடும்புவியில் அதிரக்கேட்டு விடு என்னை என்றழுது வீரத்தை உடன் போட்டுப் புறம் காட்டி ஓடியது வடவர் படை.

புறம்கொடுத்து ஓடுகின்ற ஒருவனைத் தமிழகத்து சுடுகாடும் தமிழ் மகனைப் ஏற்பதில்லை என அறிந்து போரிட்டு வென்றது தமிழர் படை. போரினிலே பலர் பகைவரால் வெட்டி வீழ்த்தப்பட்டனர். மையிருட்டு கொடுங்குளிரில் குற்றுயிரும் குலையுயிருமாய் கிடக்கிறார்கள் வெற்றியைத் தந்த வீரர்களில் சிலர். அந்த வெற்றி வீரர்களை, கையிலே விளக்கேந்தியவாறு தானைத் தலைவனின் உதவியோடு களத்திலே சென்று அள்ளி அணைத்து முத்தமிட்டுப் பாசறைக்கு கொண்டு சென்று வேல் பாய்ந்த புண்ணுக்கு விழிநீரில் கலந்த மருந்திட்டு காக்கின்றான் வேந்தன்.

இன்னும் யாரைத் தேடுகிறீர்கள் வேந்தே என்று தானைத் தலைவன் கேட்க! ஊர் அறியேன்! பெயர் அறியயன்! உருவம் மட்டும் நான் அறிவேன்! அவனைத் தேடுகிறேன். அவன் வீரன் மட்டுமல்ல! வேந்தர் அவையிலே வீற்றிருக்கவேண்டிய அறிஞனுமாவான் என்றுரைத்து மீண்டும் தேடுகிறான். நெடுநேரம் தேடியும் கிடைக்கவில்லை!

படைத்தலைவரே! பகைவர்கள் குவியல் குவியலாக கிடக்கின்ற இடத்திற்கு வாருங்கள்! அங்கே அவன் வீழ்ந்து கிடந்தாலும் கிடப்பான்! அவன் இன்னுயிரை என் உயிர் தந்தாயினும் காத்தாகவேண்டும். என் கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டி என்னோடு தேரேற்றி உடனிருத்தி ஊர்வலம் வரவேண்டும் என்று படைத் தலைவனுக்கு சொல்லியவாறு பகைவர்கள் பிணங்களைப் புரட்டிப் புரட்டிப் பார்க்கின்றான்.

யார் வேந்தே அவன் என்று மீண்டும் படைத் தலைவன் கேட்க! நான் போர் தொடங்கும் அன்று முரசறிவிக்கச் சொல்லிவிட்டு மாற்றுடை புனைந்து நகர்வலம் வந்தேன். காதல் கனிச்சுவை உண்டுகொண்டிருந்தவன், போர் முரசு கேட்டுப் பொங்கியெழுந்ததைக் கண்டேன்! தான் களத்திற்குப் போகத்தான் வேண்டுமென்று காதலியிடம் அவன் உரைத்த மொழி கேட்டேன்! அவனை நான் கண்டாகவேண்டும் என்று வேந்தன் கூறிக் களத்தினிலே வீழ்ந்துகிடப்போரிடையே மீண்டும் தேடுகிறான்.

பகைவர்கள் பலர் வீழ்ந்துகிடக்கும் இடத்தில் வீழ்ந்து கிடந்த ஒரு வீரன் 'நீர்' என்று சொல்லவும் முடியுமால் 'நாவினை' நீட்டிக் கதறுகிறான். விளக்கொளியில் அவனைக் கண்ட வேந்தன், அருகிலே சென்று பார்க்கிறான்! அவன்தான்; தான் காவிலே கண்ட வீரன் என அறிந்து வாரியணைத்து நீர் கொடுத்துத் தன் தோளிலேயேசுமந்துகொண்டுவந்து பாசறைகிடத்தித் தன்கையாலேயே மருந்திடுகிறான் புண்களுக்கு. சற்று நேரம் கழித்து வீரன் விழி திறக்கிறான். அவன் மன்னனின் கையில் இருப்பதைக் கண்டதும் விழிகளில் நீர் ததும்புகிறது. மன்னனின் விழியிலும் நீர் ததும்புகிறது. மன்னனின் விழிநீர் வீரனின் மார்புப் புண்ணில் விழுகிறது.

வேந்தே! நீங்கள் காட்டும் இவ்வளவு அன்பிற்கு நான் தகுதியுடையவன் அல்ல என்கிறான் வீரன்! நீ நாட்டிடத்துக் கொண்டிருக்கும் அன்பின் முன்னால் நான் உன்னிடத்து கொண்டிருக்கும் அன்பு மிகமிகச் சிறிதே! என்றுரைக்கிறான் மன்னன்.

தங்களிடத்து இத்தகைய அன்பைப் பெற்ற பின்னர் நான் இறந்து விட்டால்கூடக் கவலைப்படவில்லை வேந்தே! என்கிறான் வீரன்.

பொய்! பொய்! நீ அன்பு பெற வேண்டியது என்னிடமல்ல இனி! என்னைவிட உன்னை அன்பு செலுத்திக் காக்க இன்னொரு உயிர் இருக்கிறது என்கிறான் வேந்தன்! அப்பொழுதுதான் காவில் பிரிந்த காதலியின் நினைவு வருகிறது அவனுக்கு! எல்லோரும் அவனைப் பார்த்து புன்னகை புரிகிறார்கள்! அவன் இன்பத் தேர் ஏறிக் காதலியை நாடி ஓடுகிறான் கற்பனையில். அவன் உள்ளம் அவளைத் தேடிச் சென்றுவிட்டது. அவனது உடலுக்கு மருந்திட்டுக் கொண்டிருந்தான் வேந்தன்.

நம் நாட்டை மீட்கின்ற அரும் பணியில் ஈடுபடுகின்றபோது நாமெல்லாம் யாருடைய கண்ணீர் நம் சவத்தின்மீது விழவேண்டும் என்று ஏங்கிக்கிடக்கின்றோம் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை! ஆனால் நெடுநல்வாடையில் வருகின்ற கடைசி வரிகளைப் படிக்கின்றபோது அன்றும் நம்மைப் போல் எண்ணற்ற வீரர்களும்; நம்முடைய இதயத்து விளக்கிற்கு இணையான வேந்தர்களும் இருந்திருக்கிறார்கள் என்பதை அறிகிறோம்! அந்த உணர்வைத் தருகின்ற நெடுநல்வாடை வீரன் ஒருவனைத் தான் இதுவரை நீங்கள்கண்டீர்கள்.

இதோ அந்த வீரனைக்காட்டும் வீரவரிகள்:-

புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கட் காளை
சுவல்மிசை யமைத்த கையன் முகனமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்றசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரோடு முரணிய பாசறைத் தொழிலே!

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# "ஐந்து"

[நிலவழகன்]

ஐந்து! ஆம்! ஐந்து—ஐம்பது; ஐயாயிரம்; ஐந்து இலட்சம்; ஐந்து கோடி இன்னபிற உயர்ந்த எண்ணிலக்கங்களை ஐந்தென்றோ—அல்லது சிறிய ஒரு எண்ணைகவோ குறித்துப் பேசுகிறார்கள் பெரியோர்கள்—அது வழக்கு.

ஒரு கைவிரல் ஐந்து என்றுதான் பள்ளிப் பிள்ளைகளுக்கும் போதிக்கிறார்கள். ஒரு கை விரல் ஐந்தில், ஒரு விரல் இல்லை என்றால் எந்த ஒரு வேலைக்கு ஏற்றதல்ல.

ஒரு மனிதனுக்கு ஐந்து செல்வங்கள்; பெறுதற்கரிய பெரும் செல்வங்கள். அதைப் பெற்றால்—பெற்று வாழ்வானேயானால் எல்லாம் உடையவனாவான். ஏதேனும் ஒன்றை இழந்தாலும் அவன் வாழ்வில் மாண்பிருக்காது. ஒரு குறை இருப்பதாகவே எண்ணுவான்; ஏங்குவான்; அவன் நடைப்பிணமாகவே கருதப்படுவான்; அவன் வாழ்வு மலர் கருகி மடியும்!

"ஐந்தில் விளையாதது ஐம்பதில் விளையாது" என்பார்கள்; அதாவது—சின்னஞ்சிறு பருவத்தில் பழக்கத்திற்கு கொண்டு வராதது; ஐம்பதாவது அகமத்தில் [வயதில்] கொண்டு வருவது என்பது இயலாதது. இந்த நீதியை நிலைக்கச் செய்யத்தானோ என்னவோ; அடி உதவுவதுப்போல் அண்ணன் தம்பி உதவமாட்டான் என்ற முதுமொழி கொண்டு வந்தார்கள் போலும். இளமையில் கற்றுத் தேற வேண்டும்; அப்படிக் கற்காது ஊர் சுற்றித் திரியும் தம்பியை அடித்து கற்கும்படி தூண்டுகிறார்; பின்னர்—மாமேதையாகிறான்; ஊருக்கெல்லாம் உபதேசம் செய்கிறான்; நேற்று—அண்ணன் அடித்து படிக்கப் பள்ளிக்கூடம் போடா என்று தூண்டாமல் இருந்தால்; இன்று "மேதை" என்று ஊர் உலகம் புகழுமா? அந்த ஐந்து வயது அவனை வளர்த்தது: ஆளாக்கியது என்றால்; ஐந்து வயதில் கற்றது; ஐந்து வயதில் பட்ட அடிகள் அவனைத் தேற்றியது—மேதையாக்கியது.

ஐந்து—அருமையான விளைநிலம் அவனுக்கு. அந்த வயதில்தான் 'உலகத் தூணுகும் வித்து' வேரூன்றப்படுகிறது. அதன் வேர் ஆழம் பதிந்து வளர்ந்தால் உலகை தாங்கும்; உலகிற்கு நிழல் தரும். இன்றைய பள்ளிப் பிள்ளைகள்தான் நாளை உலகம் புகழும் அறிஞராக; கலைஞராக; பாவலராக; நாவலராக வளர்பவர்கள்—வளர்கிறார்கள்!!

நற்றாயர்—ஐவர் என்கிறார் நாலடியார். நாலடியார்—என்பது 'ஐந்து' எழுத்துத்தான். ஐந்து—தாய்மார்கள்; அந்த பெண்மையின் திருவுருவங்கள் புகழுக்குரியவர்கள்.

அருமை மனைவியை; ஆசைத் தம்பியை சிறு பிழைக்கெல்லாம் 'ஐந்து' விரல் பதியக் கன்னத்தில் சற்றும் இரக்கமற்று; எருமையை அடிப்பதுபோல் அடிக்கிறோம். அந்த ஐந்து விரல் பதிந்த கோடுகள்; அவர்கள் வாழ்வை அடியோடு மாற்றி — திருப்பி அமைத்துவிடுகிறது.

ஐந்து நாட்கள் இரண்டாம் உலகப்போரில் கலந்து உலகத்தை ஆட்டிப்படைத்தது; ஆர்ப்பரித்தது. 'ஐந்தே' விநாடிகளில் உலகை சாம்பலாக்கிவிடுவோம் என்று. அதன் பீதியால் — அச்சத்தால்; கைகட்டித்–தலைவணங்கியது மற்ற நாடுகள்.

ஐந்து சிற்றாறுகள் கூடினால்தான் ஒரு சிறிய ஆறு — பெரிய ஆறாக முடியும் — பயனளிக்கும். வயல் வெடிப்பு மாறும்—வேதனை தீரும். ஐவகை நிலங்களும் கனிகுலுங்கும் சோலையாகும்.

ஐந்து—கற்கள் நல்லதோர் மணி மாலை அமைக்குங்கால் ஒன்று சேருகிறது. எல்லோருடைய கண்ணோட்டத்தையும் தன்பால் ஈர்க்கிறது.

ஐந்து — மொழிகள் திராவிட மொழிகள். ஒரு நாட்டுக்கு முக்கியம் மொழி. மொழியைக் கொன்றால் உயிரை கொல்வதாகும்; நாட்டை கொல்வதாகும்; உரிமையைக் கொல்வதாகும். மொழி உயிர்; நாடு உடல். ஆக—ஒருவனுக்கு மொழிப் பற்று; நாட்டுப் பற்று; வளர்ந்தால்; நாடு வாழும்—வளரும். அந்த நாட்டு மக்கள் வாழ்வு மலரும். இன வழி நாட்டைக் காட்டி; மொழி வழி ஒற்றுமையை நிலைநாட்டுவது—

"ஐந்து — தனித் தனி நாடுகள்; வெவ்வேறான நடை உடை பாவனைகளையுடைய நாடுகள் அவைகள் எல்லாம் ஒன்று கூடி உலகரங்கு அமைத்து புகழ் மனக்க ஒழுகுகிறது; உலகிற்கு நீதி புகட்டுகிறது. உலகப் பாதையை செப்பனிடுகிறது—

அடிமைக் குட்டையில் மண்ணோடு மண்ணாக மக்கி மறைந்து வரும் நாடுகளுக்கு கை கொடுத்து தூக்கி தன்னிச்சையாக— தனித்தியங்க— தனிக்கொடி வானளாவ பறக்கவிட நெறி—முறைகளைக் கூறும்போது; திராவிடம்—"ஐந்து" எழுத்துக் கொண்ட திராவிடம் வாழும்; வாழ்ந்து வழிக் காட்டும்.

"ஐந்து" விரல்களும் ஒன்று சேர்த்துத் தட்டினால்தான் ஒலிஎழும் என்ற நீதி நிலை இருக்கும்போது; "ஐந்து" மொழி கொண்ட திராவிடம் ஒன்றுபட்டு, ஒரு மனப்பட்டு; "கூட்டாட்சி" என்ற ஐந்தெழுத்துக் கொண்ட திராவிடம் வாழ வாங்கு வாழும். இதில் ஒன்றும் ஐயமில்லை. எல்லாம் ஐந்து! எங்கும் ஐந்து!!

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.